Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

பொதுசன நூலகம்
14 JUN 2004
மாநகர சபை
யாழ்ப்பாணம்

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-9813)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி-31 | 13-06-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –116

# எதிர்க்கட்சியினரின் ஒருங்கிணைவு

# ஆளும் கட்சியினர் தரப்பில் அச்சம்!

## சனாதிபதி மீது குற்றவியல் பிரேரணை கொண்டுவரலாம் எனவும் சந்தேகம்

(கொழும்பு)

**எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஆளும் கட்சியின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி அடைந்துள்ளதோடு - ஓரணியில் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள முற்பட்டுள்ளமையும், அவை சனாதிபதி சந்திரிகாவிற்கும் எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்வதாக வெளியாகியுள்ள தகவல்களினாலும் ஆளும்கட்சித் தரப்பு குழப்பத்திற்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதன் காரணமாக, ஆளும்கட்சி பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதோடு எதிர்கட்சிகளின் நடவடிக்கைகள் குறித்து அச்சமும் கொண்டுள்ளது. அதிலும் குறிப்பாக சபாநாயகராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் இருப்பதற்கமைவாக பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தமது விருப்பத்திற்கு ஏற்ப ஆளும் கட்சியினர் நடத்துவது சிரமம் மிக்க தொன்றாகவே உள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## படைச்சிப்பாய்– இளைஞர் கைகலப்பு மீன்பிடிக்கப்படையினர் தடை விதிப்பு

பருத்தித்துறையின் கற்கோவளம் பகுதியில் நேற்றுக்காலை படைச்சிப்பாய் ஒருவருக்கும் இளைஞர் ஒருவருக்கும் இடையில் இடம் பெற்ற கைகலப்பின் எதிரொலியாக மீன்பிடிக்க மீனவர்கள் எவரையும் கடலுக்குச்செல்ல படைத்தரப்பு அனுமதி மறுத்தது.

கற்கோவளம் கடற் ரையோரமாக அமைந்துள்ள இராணுவத்தின் சோதனைச் சாவடியில் வைத்து மீனவர் ஒருவர் படைச்சிப்பாய்யொருவரால் தாக்கப்பட்டுள்ளார். இதனால் வெகுண்டெழுந்த குறித்த மீனவ இளைஞனும் படைச்சிப்பாயினைத் தாக்கியுள்ளார்.

மீன்பிடிக்கச்செல்வதற்கான “பாஸ்” அனுமதித்துண்டினை எடுத்துச்செல்லாதது தொடர்பாகவே இருவருக்குமிடையே கைகலப்பு இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு விரைந்த படை அதிகாரிகள் அங்கு சுமூக நிலையை ஏற்படுத்தியிருந்தனர். எனினும் பின்னர் அக் காவலரண் ஊடாக மீனவர்கள் எவரையும் கடலுக்கு தொழிலுக்குச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்

### சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதில் கடந்த பல வாரமாக தாம் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

நேற்று அரசு தொலைக்காட்சி மூலம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதில் இரு தரப்பினரும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம். இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான யோசனைகள் பற்றி மட்டுமே கவனம் செலுத்தப்ப டவேண்டுமென விடுதலைப்புலிகள் இயக்கம் விரும்புகின்றது. அதேவேளை அரசாங்கமோ நிரந்தரத் தீர்விற்கான கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திநிற்கின்றது.

அதேவேளை இடைக்கால அதிகார சபை நிறுவப்படவேண்டியதன் அவசியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய தேவையினையும் அரசாங்கம் உணர்ந்துள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தைக் கான நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்டுள்ள முரண்பாடுக ளைத் தீர்ப்பதில் கடந்த பல வாரமாக நாம் ஈடுபட்டுள்ளோம். பல இடைவெளிகளுக்குப் பிறகு பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கின்றோம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இளைஞர் ஒருவர் பொலிசாரின் தாக்குதலில் காயம்

(மன்னார்)

மன்னாரில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதால் காயமடைந்துள்ளார்.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த பங்கிராசு மைக்கல் (வயது 21) என்பவர் மோட்டார் சைக்கிளில் சென்ற சமயம் நிறுத்துமாறு பொலிசார்காட்டிய சைகையை கவனியாது சென்றதையடுத்து இவரைக் கைதுசெய்த பொலிசார் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

பின் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இவர் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் இதேவேளை இவரின் பெற்றோர் இவர் தாக்கப்பட்டதனால் உடல் ரீதியாகக் காயப்பட்டுள்ளதனால் இவரை வைத்தியசாலையில் அனுமதிக்கக் கோரி மன்னார் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (மி)

## பசளைப் பையில் கட்டிய நிலையில் ஒட்டமாவடியில் சடலம் மீட்பு

ஓட்டமாவடியில் பசளைப் பையில் கட்டிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து வாழைச்சேனை பொலிசார் நேற்று சடலத்தை மீட்டனர். தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொலை இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இடம் பெற்றுள்ளதால் சடலம் உருக்குலைந்துள்ளதாகவும் அதே நேரம் இராணுவ சீருடையினை ஒத்த உடை அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சடலம் மீட்கப்பட்டதையடுத்து மக்களிடையே மீண்டும் பீதி ஏற்பட்டுள்ளது.

## ஒஸ்லோவில் ஆகஸ்ட் மாதத்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம்

### அரசாங்கத் தரப்பு கூறுகின்றது

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க விருப்பதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. இந்தப் பேச்சு வார்த்தைகள் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும் எனவும் முதல் சுற்றுப்பேச்சு வார்த்தையில் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணி இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக பேச்சு நடத்தப்படுவதைக் கடுமையாக எதிர்த்துவரும் நிலையில் சனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளது அவதானிகள் மத்தியில் சந்தேகங்களைத் தோற்றுவிததுள்ளது. இடைக்கால நிர்வாக சபைஉருவாக்கப்பட்டு மூன்று அல்லது

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிகாரிகளின் யாழ்.விஜயம் இரத்தானது

(கொழும்பு)

யாழ் குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வருகைதரவிருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அதிகாரிகளது பயணம் இறுதி நேரத்தில் இரத்துசெய்யப்பட்டது . நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்..செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது யாழ்.அரசஅதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் அவர்களது வரவிற்காகக் காத்திருந்தனர் அவ் வேளையிலேயே பயணம் இரத்து செய் யப்பட்டமை குறித்துத்தெரிவிக்கப்பட்டது. (27)

## பேரினவாத சக்தியின் பல்வேறு முகங்களை சர்வதேசத்திற்குக் காட்ட ஒன்று திரள்வோம்

### யாழ்.கண்டனப் பேரணி ஏற்பாட்டுக்குழு அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

ஆக்கிரமிப்புப் போக்கும், அடக்குமுறை ஆட்சியும் கொண்ட பேரினவாத சக்திகளின் தமிழருக்கு எதிரான பல்வேறு முகங்களை சர்வதேச உலகிற்குக் காட்ட ஒன்று திரள்வோம். என எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்.நகரில் இடம்பெறவுள்ள பேரணி குறித்து கண்டனப்பேரணி ஏற்பாட்டுக்குழு நேற்றுவிடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை சீராகும். அதன் மூலம் சமாதானம் தொட்டும் என்ற அர்த்தத்திற்கு மாறாக நிறுத்தப்படாத யுத்தம் ஒருதலைப்பட்சமாக விடுதலைப்புலிகள் மட்டும் எவ்வித களங்கமுமில்லாமல் கடைப்பிடித்து வருகின்றனர். பேரினவாதப் பொய்யராக யுத்தத்தை நிறுத்தியதாகக் கூறிக்கொண்டு தனது புலனாய்வுப் பட்டாளத்திற்குப் புத்திமதிகளைச் சொல்லி தேசத்துரோகிகளைக் கூட்டாளிகளாக்கி எமது தேசத்தின் மீதும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**இறபர் முத்திரை**

கிளிநொச்சி பொலிமர் றபர்ஸ்டாம் உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி லேமனட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ள பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி
TP. 0212285750 (சி.9823)

**ஆசிரியர்போட்டிப் பரீட்சைவகுப்பு**

எதிர்வரும் யூலை மாதம் 3ஆம் வாரத்தில் நடை பெறவுள்ள தகுதி காண் ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் ஆரம்பம். இடம் அக்கராயன் ம.வி.12.06.2004 சனி, ஞாயிறு காலை 930 மணி 275 சில்வா வீதி, வட்டக்கச்சி 12.06.2004 சனி மாலை 4.15 மணி. (4592)


# கண்ணிவெடி, வெடிபொருட்களால் வன்னிப்பகுதியில் 29 பேர் சாவு

## விழிப்புணர்வு மூலமே இதனைத் தவிர்க்கலாம்

(அலுவலகசெய்தியாளர்)

வன்னிப்பகுதியில் கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் வெடித்ததால் 2000ஆம் ஆண டிற்குப் பின்னர் இன்று வரை 29 பேர் சாவடைந்துள்ளனர். இவ்வாறு வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனத்தின் புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது. மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவதன் மூலம் இவற்றைத் தவிர்க்கலாம் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

மேற்படி விடயம் பற்றி அன் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சந்திரசேகரம்பிள்ளை அவர்கள் தகவல் தருகையில் 2000ஆம் ஆண்டுக்குப்பின் வன்னிப்பகுதியில் இராணுவத்தினரிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றங்களில் ஈடுபட்டு வரும் மக்களே உயிரிழப்பைச் சந்தித்து வருகின்றனர். இராணுவத்தினர் புதைத்து விட்டுச்சென்ற மற்றும் கைவிட்டுச்சென்ற வெடிபொருட்கள் வெடிப்பதால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதோடு உயிரிழப்பையும் சந்தித்து வருகின்றனர். இந்த வகையிலேயே 2000ஆம் ஆண்டு 119 விபத்துக்கள் நடந்துள்ளன. இதில் 131 பேர் பாதிப்படைந்தனர் 73 பேர் கண்ணி வெடிவெடித்ததாலும் 58 பேர் வெடிக்காத வெடிபொருள் வெடித்ததாலும் பாதிப்படைந்தனர். இவற்றில் 15 பேர் சாவடைந்தனர் 2001ஆம் ஆண்டில் 37 விபத்துக்கள் ஏற்பட்டன இதில் 51 பேர் பாதிக்கப்பட்டனர் 28 பேர் கண்ணி வெடியின் தாக்கத்தாலும் 23 பேர் வெடிக்காத வெடிபொருளினாலும் பாதிக்கப்பட்டதோடு 3 பேர் சாவடைந்துள்ளனர். 2002ஆம் ஆண்டில் கண்ணிவெடியின் தாக்கத்தால் 15 பேரும் வெடிக்காத வெடிபொருட்கள் வெடித்ததால் 17 பேரும் பாதிக்கப்பட்டதோடு 7 பேர் சாவடைந்தனர் 2003ஆம் ஆண்டு 6 பேர் கண்ணிவெடியின் தாக்கத்தாலும் 9 பேர் வெடிக்காத வெடிபொருளின் தாக்கத்தாலும் பாதிக்கப்பட்டனர். 2004ஆம் ஆண்டு தொடக்கம் நேற்று வரை கண்ணிவெடியின் தாக்கத்தால் இருவர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 4 பேர் உயிரிழந்துள்ளனர்.என அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க வெடிக்காத வெடிபொருட்களினாலோ கண்ணிவெடிகளின் தாக்கத்தினாலோ பாதிப்படைந்து அல்லது உயிரிழப்பை மக்கள் சந்திக்கக் காரணமாக அமைவது மக்களின் அசமந்தப்போக்கேயாகும். கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் பொறிக்கப்பட்டுள்ள எச்சரிக்கைக் குறியீடுகளையும் பொருட்படுத்தாமல் அத்துமீறி அப்பகுதிக்குள் செல்வதாலேயே பாரிய இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். அத்தோடு கண்ணிவெடியகற்றும் பிரிவினர் வெடிபொருட்கள் இருப்பதாக இனங்காணப்பட்ட பகுதிகளில் முட்கம்பி மற்றும் கம்பிவேலிகளை அமைத்து அப்பகுதியைப் பாதுகாத்துவர மக்கள் தமது அற்பதேவைகளுக்காக அவற்றை எடுத்துச் செல்வதால் இனங்காணப்பட்ட இடத்தில் வெடிபொருட்கள் இருப்பதை அறியாத ஏனையோர் அப்பகுதியால் செல்லும்போது பாரியசேதங்களை எதிர்கொள்வதோடு உயிரிழப்பையும் சந்திக்க நேரிடுகின்றது. ஆகவே மக்கள் இவ்வாறான அசமந்தச் செயற்பாடுகளில் ஈடுபடாதிருப்பதன் மூலமே வெடி பொருட்களின் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என அவர்மேலும்தெரிவித்தார். (ச)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இல.வங்கி 65ஆயிரம் ரூபா அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஜப்பான்அரசின் நிதிஉதவியுடன் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய நோயாளர் விடுதிகளின்கதவு, யன்னல்களுக்கு திரைச்சீலைகள் பெறுவதற்கு இலங்கைவங்கியின் கிளிநொச்சிக் கிளையினால் 65.000ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு வசதிக் குறைவுடன் மக்களுக்கு சேவையாற்றிவந்த இவ்வைத்தியசாலைக்கு ஜப்பான் அரசு நிதி ஒதுக்கி புதிய நோயாளர் விடுதிகளை அமைத்துக் கொடுத்திருந்தது அவ்வாறு ஜப்பான் அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்ட இந்த நோயாளர் விடுதிகளை அவதானமாகப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையால் 65000ரூபா பணம் யன்னல், கதவுகளுக்குத் திரைச்சீலைகள் பெறுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த வைத்திய கலாநிதி யூடி றமேஸ் ஜெயக்குமார் வைத்தியசாலையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை பலதரப்பினரிடமும் உருவாகியுள்ளது. அதன் காரணமாகக் கட்டடத்தைப் பாதுகாப்பதற்குப் பலரும் கருசனை கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளையினரின் இத்தகைய சேவைமனப்பாங்கைத் தான் பாராட்டுவதாகவும்தெரிவித்தார். (லோ)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(உடையார் கட்டு)

சமூகப் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தினதும் பெற்றாரினதும் ஒழுங்குபடுத்தலில் எதிர்வரும் 16ஆம் திகதி அன்றுஉடையார்கட்டு வடக்கு கலைமகள் முன்பள்ளி விளையாட்டுவிழா நடைபெறவுள்ளது. இவ்வருடாந்த விளையாட்டு விழா கலைமகள் முன்பள்ளி மைதானத்தில் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் (19)

# ஜப்பான் நிறுவன உதவியுடன் மன்னார் கிராமங்கள் புனரமைப்பு

(மன்னார்)

மன்னாரில் உள்ள சிலகிராமங்களைத் தெரிவு செய்து நிவாரணம் சமூக ஒருக்கிணைப்பு கட்டமைப்பு புனரமைப்பு என்ற ரீதியில் ஜப்பான் நாட்டு யைக்கா என்ற நிறுவனம் புதிய அபிவிருத்தி வேலைகளை செய்யவுள்ளது. இதற்கென மன்னாரில் அண்மையில் ஒரு அலுவலகம் நிறுவப்பட்டது. இதன் செயலாளராக எட்வேட் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இந்த நடவடிக்கையைப் பார்வையிட வந்த புனர்வாழ்வு அமைப்பின் புதிய செயலாளராக எம்.எஸ்.ஜெயசிங்கா வுடன் மன்னார். அரசாங்க அதிபர் விசுவலிங்கம் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ள முக்கிய குறைபாடுகளை எடுத்துரைத்தார். (மி)

## அன்னை சாரதாதேவியின் ரதம் கிளிநொச்சி வருகை

(அலுவலகசெய்தியாளர்)

தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ரதம் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்திற்கு வருகை தரவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு வருகை தரவுள்ள ஸ்ரீ.சாரதாதேவியின் ரதத்துடன்சுவாமி விமுர்தானந்தா, சுவாமிசோமானந்தர் ஆகியோர் வருகை தருவதுடன் மகாதேவா ஆச்சிரமத்தில் சிறப்புரைகளும் நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)



உலக சுற்றுச் சூழல் தினமான யூன்- 05ஆம் திகதி மன்னார் அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் பள்ளிமுனைக் கிராமத்தில் சுற்றுச் சூழல் தொடர்பாகமக்களின் விழிப்புணர்ச்சியை வெளிக்கொணர பள்ளிமுனைத் தேசிய எழுச்சிப் பேரவையினரால் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியின் போது (படம்:மிரண்டா)


# வெளிநாட்டு வேலைவாய்ப்பா?

**இதோ!கவலையே வேண்டாம்**
**டோகாவா?அல்லது கட்டாரா?**

- 20 நாட்களுக்குள் பயணம்
- உணவு இலவசம்,சம்பளம் 500 Q D
- வேலைநேரம் 8மணித்தியாலம்
- விரும்பினால் 6 மணித்தியாலம் மேலதிக வேலை

**அமெரிக்க நிறுவனத்தில் 150இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் – கைவசம் விஸா**

நீங்கள் ஜெனரல்லேபர் அல்லது ஹெல்ப்பர் ஆக விரும்பினால் உடன் தொடர்பு

A.A.மைக்கல்
0777-279813 (சி.9913)

**உங்களிற்காக மிக விரைவில் யாழில் கிளை**


# அறிவித்தல்

கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பயிற்சி நெறியை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மூலமாக, அரச சான்றிதழ் பெறுவதற்கான செயன்முறைப்பரீட்சை எதிர்வரும் 07.07.2004 - 16.07.2004 வரை எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளமையால், மேற்படி சான்றிதழைப் பெற விரும்புகின்ற மாணவர்கள், எதிர்வரும் 17.06.2004க்கு முன் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

1. வீட்டு மின்னிணைப்பு பயிற்சி
2. வானொலி, ரீ.வி. திருத்துதற் பயிற்சி
3. கட்டட நிர்மானப் பயிற்சி (மேசன்)
4. மரவேலைப் பயிற்சி.

அதிபர்,
கிளி. தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-9717)

# கண்ணீர் அஞ்சலி

**திரு. செல்லத்துரை சுரேஷ்**
**(நளின்)**

நேற்றைய தினம் அகால மரணமடைந்த எமது செயலக உத்தியோகத்தர் திரு.க. பஞ்சலிங்கம் அவர்களின் மருமகன் திரு. செல்லத்துரை சுரேஷ் அவர்களுக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.

(4598)

# பாகிஸ்தான் –ஆப்கான் எல்லைப்பகுதி கிராமங்களில் அல்–ஹைதா தீவிரவாதிகளை தேடும் பாக்.படையினர்

## -3 நாள் மோதலில் 35 தீவிரவாதிகள் 15 படையினர் பலி

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதிக் கிராமங்களில் அல்-ஹைதா தீவிரவாதிகளைத் தேடி பாகிஸ்தான் படையினர் கடந்த மூன்று நாட்களாக நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றனர். இத் தேடுதல் நடவடிக்கையின்போது பழங்குடியினர் வசிக்கும் கிராமங்களில் ஆங்காங்கே தீவிரவாதிகளுக்கும் படையினருக்குமிடையில் இடம் பெற்ற மோதல்களில் தீவிரவாதிகள் படையினர் பொது மக்கள் என 53பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

பாகிஸ்தானை அடுத்துள்ள ஆப்கானிஸ்தானில் தெற்கு பாகிஸ்தான்மற்றும் பழங்குடியினர் வசித்துவரும் ஷங்காய் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் கடந்த மூன்று தினங்களாக அல்-ஹைதா இயக்கத்தை அழிப்பதில் தீவிரம் காட்டி வருகிறது.

இந்த நடவடிக்கை மூலம் அல்-ஹைதாவின் பாதுகாப்பு மிக்க இரண்டு வீடுகள், விமான வெடி குண்டுகள் மூலம் தாக்கப் பட்டுள்ளது என்றும் 35 அல்-ஹைதாவினர் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும் பாகிஸ்தான் தான் இராணுவ செய்தித்தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஷகத் சுல்தான் இஸ் லாமாபாத்தில் செய்தியாளர்கள் கூட்டத்தில் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

இதேவேளை இந்த அல்-ஹைதா அழிப்பு நடவடிக்கையில் 15 .இராணுவம் கொல்லப் பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் சிலரும் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# டொனால்ட் றீகனின் பூதவுடல் கலி போர்னியாவில் அடக்கம்

கலிபோனியாவில் மறைந்த அமெரிக்க முன்னாள் சனாதிபதி டொனால்ட்றீகனின் பூதவுடல் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.இவரது இறுதிச் சடங்குகளில் தற்போதைய அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் தென்னாபிரிக்க சனாதிபதி தபோபெக்கி, ஜோர்டான் மன்னர் அப்துல்லா உள்ளிட்ட உலகத் தலைவர்கள் அனேகமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

தலைநகர் வோஷிங்டனில் வைக்கப்பட்டிருந்த டொனால்ட் றீகனின் உடல் விமானம் மூலம் கலிபோர்னியாவுக்கு நேற்று முன்தினம் காலை கொண்டு செல்லப்பட்டுமுழுஅரச மரியா தையுடன் அடக்கம் செய்யப் பட்டுள்ளது.நேற்று முன்தினமும் அமெரிக்கா முழுவதும் துக்கதினம் அனுட்டிக் கப்பட்டுள்ளது.டொனால்ட் றீகன் அமெரிக் காவின் 40ஆவது சனாதிபதியாக பதவிவகித்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.



இறுதிக் கிரியைகளில் பிரமுகர்கள்

# 1984 இல் சீக்கியருக்கெதிரான கலவரத்திற்கு இந்.பிரதமர் கவலை

(புதுடில்லி)

நாட்டில் அமைதி நிலவ வேண்டும். மத ஒற்றுமை பாதுகாக் கப்பட வேண்டும்.இதற்கு அனை த்து தரப்பினரும் பூரண ஒத்து ழைப்புவழங்க வேண்டும்.இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று புது டில்லியில் வேண்டுகோள் விடுத் துள்ளார்.நேற்றுசீக்கிய மதவழிபாட்டுத் தலத்திற்குச் சென்ற அவர் வழிபாட்டின்பின்னர் செய்தியாளர்களிடமும் பேசியு ள்ளார்.1984 இல் சிக்கியர்களுக்கு எதிராகநடந்த கலவரம் கோத்ரா ரயில் எரிப்புப் போன்றவை இன்றும் மனவேதனை அளிக் கின்றன. இது போன்ற சம்ப வங்கள் இனி நடைபெறுவது இருக்க அமைதியான சூழலை உருவாக்கவேண்டியது அவசியம் என்றும்கூறியுள்ளார்.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சென்ற வெள்ளி (11ஆம் திகதி) கார்க்குண்டு வெடிப்பு நடந்த இடத்தை ஆராயும் அமெரிக்கப்படையினர் தென் மேற்கு பாக்தாத்தின் நெடுஞ்சாலையொன்றில் அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணியை இலக்கு வைத்து இக்கார்க்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது.



"ஸாம்பொன்கா"வில் உள்ள பிலிப்பைன்ஸ் இராணுவ முகாம் அல்-ஹைறதாவுடன் தொடர்புடைய தெற்கு பிப்பைன்ஸ் குழுவொன்றினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் குண்டுத் தாக்குதல் ஒன்றில் ஒருபடைவீரர் கொல்லப்பட்டும் இரண்டு பாதுகாப்பு ஊழியர்கள் படுகாயமடைந்தும் இருந்தனர்.

# பொடோச் சட்டம் காலாவதியாக முன் நீக்கப்படுமென்கிறார் இணையமைச்சர்

(புதுடில்லி)

தீவிரவாதிகளை ஒடுக்கும் பொடோ சட்டம் அது காலா வதியா வதற்கு முன்னரேநீக்கிக் கொள் ளப்படும்.

இவ்வாறு மத்திய சட்டத்துறை இணையமைச்சர் கே.வெங்கடபதி நேற்றுமுன்தினம்செய்தியாளர் களிடம் கூறியுள்ளார்.கடலூரில் நேற்றுமுன்தினம் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர் களிடம்சட்ட இணையமைச்சர் பேசி னார்.

மூன்று ஆண்டுகளுக்கே பொடோ சட்டம் கொண்டு வரப்பட்டது. எதிர் வரும் அக்டோபர் மாதத்துடன் இந்தச் சட்டம் காலா வதியாகின்றது என்று கூறியுள்ளார்.

பொடோ சட்டத்தை முன்னாள் வாஜ் பாய் அரசு கொண்டு வந்த போது அது தவறாகப்பயன் படுத்தப்ப டமாட்டாது என்று வாக்குறுதி அளிக் கப்பட்டது. ஆனால சிலமாநி லங்கள் பொடோ சட்டம் தவறாகப்பயன படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் அவர்கூறியுள்ளார்.

தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக் கின்றன என்று தெளிவுபடுத்திக் கூறிய அவர் இந்திய சனாதி பதியின் அனுமதி பெற்று மது ரையில் உயர்நீதிமன்றக் கிளை விரைவில் திறக்கப்படும் என்றும் அவர்கூறியுள்ளார்.

## ஆசிய ஒத்துழைப்பு கூட்டம் சீனாவில்

(பெய்ஜிங்)

சீனாவில் வரும் 21ஆம் 22ஆம் திகதிகளில் 22நாடுகளின் வெளி யுறவுத்துறை அமைச்சர்கள் கலந் துகொள்ளும் ஆசிய ஒத்துழைப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டம் சீனாவின் கிழக் குக் கடலோரத்திலுள்ள பின்ட வோநகரில் நடைபெறவுள்ளது.

# யூதகுடும்பம் ஒன்றிற்கு 3 இலட்சம்டொலர் காஸாவிலிருந்து வெளியேறினால் கிடைக்கும்

(டெல்அவிவ்)

காஸாப் பகுதியில் இருந்து வெளி யேறவுள்ள யூத குடியேற றவாதிகளின் குடும்பம் ஒன்றிற்கு மூன்று இலட்சம் டொலர் வழங்க

இஸ்ரேல் திட்டமிட்டு வருவதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்சுயவிருப்பத்தின் பேரில் குடியேற்றத் திட்டத்தில் இருந்து வெளியேறிச் செல்லும் குடியேற்ற வாசிகளுக்கு விரைவாக இச்சலுகை வழங்கப்படுமென அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை காஸாப் பகுதியில் இருந்து குடியேற்ற வாதிகளை வெளியேற்றுவது தொடர்பாக பிரதமர் ஏரியல்ஷரோன் தெரி வித்தகருத்துக்களை அவரது அமைச்சரவை கொள்கையளவில் அங்கீகரித்துள்ளது.

குடியேற்றத்திட்டங்களை அகற்றும் தீர்மானம் குறித்து ஷரோ னிற்கும் அவரது கூட்டு அரசாங் கத்தில் உள்ள கடும்போக் காளருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம் எனக்கருதப்படுகின்றது.

# பிரித்தானிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தொழிற் கட்சிக்குப் படுதோல்வி

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தலைமையிலான தொழிற்கட்சி பிரிட்டனில் நடைபெற்ற உள்ளூ ராட்சித் தேர்தல்களில்படு தோல்விய டைந்துள்ளது.

166 உள்ளூராட்சி சபைக்கான தேர்தல்முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையிலே பிரிட்டனில் பலபகுதிக ளில் 477 இலங்கை தொழில்கட்சி இழந்துள்ளமை தெரியவந்துள்ளது. எதிர்க் கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சி 181 அதிகப்படி ஸ்தானங்க ளைப் பெற்றுள்ளது.

அதேசமயம் ஈராக்கிய யுத்தத் திற்கு தீவிர எதிர்ப்புத் தெரிவித்த லிபரல் சனநாயகக் கட்சி 134அதிகப் படியான ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது.

பி.பி.சி. ஒலிபரப்பு நிலையம் வெளியிட்ட தகவலின் படி தொழி ற்கட்சி 3ஆம் இடத்தை பெற்றுள் ளமை தெரியவந்துள்ளது. முதல் இரண்டு இடங்களையும் கொன்சர் வேட்டிவ் கட்சியும் லிபரல் சனநாய கக் கட்சியும் பெற்றுள்ளன. இதற்கிடையில் பாக்கிங்காம்ஜ பகுதியில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக அளிக்கப்பட்ட வாக்குக்களை எண்ணும்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.



இந்தோனேசியாவின் 'அசி' மாகாணத்தில் சிறுவன் ஒருவன் இராணுவ கவச வாகனம் ஒன்றின் முன்னால் நடந்து செல்கின்றான் அல்-ஹைதாவுடன் தொடர்புடைய குழு வொன்றினால் தாக் குதல் நடாத்தப்படக் கூடும் என வெளி நாட்டு புலனாய்வு அமைப்பொன்று எச் சரிக்கை விடுத் துள்ளதை அடுத்து இந்தோனேசியாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

# ஈராக் இடைக்கால அரசின் அமைச்சர் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக் இடைக்கால அரசின் வெளியுறவுத் துறைஇணை அமைச்சர் பஷான் சலிகுப்தா சதாம் ஹுசைன் ஆதரவாளர்களினால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஈராக்கில் இடைக்கால அரசில் வெளியுறவு இணையமைச்சராகப் பதவியேற்றவர் பஷான் சலிகுப்தா சதாம் ஹுசைனுக்கு எதிரான கொள்கைகளையுடையவர் சலிகுப்தா இவர் வெளியுறவு இணைய மைச்சராக பதவியேற்றதற்கு ஈராக் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்த னர்.இந்நிலையில் தலைநகர் பாக்தாத்திலிருந்து தனது அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த சலிகுப்தாவை வழிமறித்த சதாம் ஆதரவுத் தீவிரவாதிகள் அவரை சுட்டுள்ளனர் இந்தச் சம்பவத்தில் குப்தா அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# சந்திரிகாவின் முன்னோக்கிய அடிகளும் பின் நோக்கிய நகர்தலும்

சபாநாயகருக்கான போட்டியில் தோல்வியடைந்தவுடன் மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்குமாறு நோர்வே அரசிற்கு அழைப்பு விடுத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நான்காவது பாராளுமன்ற அமர்வில் ஏற்பட்ட குழப்பம், வன்முறையும் அவற்றைத் தொடர்ந்து எதிரணிகள் ஓர்அணியில் திரண்டுள்ள நிலையிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.



இவ்விரண்டு கூட்டத்திலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளதோடு, விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள தன்னாட்சிஅதிகாரசபை நிரல் திட்டத்தைதாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளாது விட்டாலும், இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் சனாதிபதியின் இந்நிலைப்பாடானது இவ்விரண்டு கட்டத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவ்வாறானதாக இருந்ததாக இல்லை. நோர்வேயை அழைத்த சனாதிபதி சந்திரிகா நோர்வேக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கவில்லை. சமாதான பேச்சுவார்த்தை முயற்சியில் ஈடுபட்ட நோர்வேத் தரப்பினர் சனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்காக நாட்கணக்கில் காத்திருக்க வேண்டியதாகவே இருந்தது. சமாதானப்பேச்சுக்கள் தொடர்பாகப் பேசமுயன்ற ஜப்பானின் விசேட தூதுவர் யசுசிஅகாஷி கூட சனாதிபதியை குறித்த நேரத்தில் சந்திக்க முடியாது காத்திருந்தே சந்திக்கவேண்டியிருந்தது.

சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பான சனாதிபதியின் குழப்பமான நிலைக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் அவர் உளப்பூர்வமான ஈடுபாடு கொண்டிருக்காமை. என்பது ஒருபுறம் இருக்க- உள்நாட்டு மற்றும் பிராந்திய அரசியல் சூழ்நிலைகள் மாற்றங்களும் இவ் இடைப்பட்ட கால மாற்றத்திற்கு காரணமாக அமைந்திருத்தல் கூடும். உள்நாட்டைப் பொறுத்து ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயை அழைத்தமையையும் விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்று தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதையும் வன்மையாக எதிர்த்தது. இதனைச் சனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் மகிந்தராஜபக்ஷவிற்கும் நேரடியாகவே தெரிவித்தது.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகாவினால் ஜே.வி.பியின் அச்சுறுத்தலைத் தாண்டிச்செல்ல முடியவில்லை. அதாவது ஜே.வி.பியை பகைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளைப் பகிரங்க மாக ஆதரிக்க முடியவில்லை. ஆனால் ஜே.வி.பியின் நிலைப்படானது விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு மட்டுமல்ல சனாதிபதி சந்திரிகா ஆட்சியைப் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளக் கூடிய அரசியல் நகர்வுகளுக்கும் முட்டுக்கட்டையாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக சிறிய கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றுடனான ஒத்துழைப்பிற்கு இடையூறாகவே உள்ளது. ஒரு வகையில் பார்த்தால் இக்கட்சிகளுடனான உறவுகள், பேரம பேசுதல்கள் ஜே.வி.பி.யினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சனாதிபதி சந்திரிகாவினால் சிறுபான்மை அரசாங்கத்தைப் பாதுக்காப்பதற்கான அரசியற் பண்புகள்கூடமேற்க் கொள்வது சிரமம்மிக்க தொன்றாகியுள்ளது.

இதேபோன்று சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஜே.வி.பி.யின் நிலைப்பாடு சனாதிபதி சந்திரிகாவை அரசாங்கத்தின் தேவை கருதியாயினும்சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாததொரு சூழ்நிலையை தோற்றுவித்தது எனலாம். அதாவது உதவி வழங்கும் நாடுகளுக்கு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதானதொரு தோற்றப் பாட்டைக் கூட சனாதிபதி சந்திரிகாவினால் உருவாக்க முடியாது போய்விட்டதெனலாம். அவ்வாறு இல்லாது விட்டால் கடந்த மாதத்தின் பிற்பகுதியில் பெல்ஜியத்தின் தலைநகர் பிரல்செல்சில் நடைமுறை உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்பாவது சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சி நகர்வுகளை முன்னெடுக்கப் படுவதை உறுதிசெய்வது போன்று காட்டிக் கொண்டிருப்பார்.

உள்நாட்டில் இத்தகைய தொரு நெருக்கடிக்குள் சனாதிபதி சந்திரிகா உள்ளாகியிருந்த அதேவேளை இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றமானது அதாவது, காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தமையானது சனாதிபதி சந்திரிகா சமாதான பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதறகான நோர்வேயின் பங்களிப்பை மறு பரிசீலனைக்குட் படுத்துவதற்கானதொரு நம்பிக்கையைக் கொடுப்பதாக இருந்தது.

அதாவது இந்தியாவில் புதிதாகப் பதவிக்கு வந்த காங்கிரஸ் கூட்டணி அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் சிறிலங்கா அரசிற்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை உருப்பெற்றது. இது இந்தியாவின் ஆதரவினைப் பெற்றுக்கொள்வ அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல், அதற்காகக் காத்திருத்தல் என்ற முடிவிற்கு சனாதிபதி சந்திரிகாவைத் வரத்தூண்டியது.

இந்தியாவின் புதியஅரசாங்கம் சிறிலங்கா அரசு தொடர்பான நிலைப்பாட்டில் பெரும் மாற்றம் கொண்டதாக இருக்கும் என்ற எதிர்பார்க்கையை சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரால் கூட வெளிப்படுத்தாமல் இருக்கமுடியவில்லை. அவர் இந்தியாவில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வரவிருக்கும் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாடுகடத்தக் கோருவது தொடர்பான பிரச்சினைகளை எழுப்பும் என எதிர்பார்க்கலாம். என்ற அவரது அபிப்பிராயமே வெளிப்படுத்தியது.

அத்தோடு சிறிலங்காவிற்கான முன்னாள் இந்தியத் தூதுவரும் முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலருமான ஜே.என்.டிக்சிற் அவர்கள் பாதுகாப்புத்துறைஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமையும் சிறிலங்கா ஆட்சியாளருக்கு சற்று உற்சாகம் ஊட்டும் அம்சமாகவே இருந்தது. அதாவது விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகள் இந்தியாவில் ஆட்சிக்கு வந்துள்ளதாக அவர்களின் நம்பிக்கை இருந்தது.

ஆனால் இலங்கை இனப்பிரச்சினையில் குறிப்பாக இலங்கை தொடர்பான விவகாரத்தில் இந்தியாவின் புதிய அரசு அவசரப்பட்டு தீர்மானங்களை மேற்கொள்ளவோ நடவடிக்கைகளில் ஈடுபடவே தயாராக இல்லாதது மட்டுமல்ல. அதற்கான சூழ்நிலையும் அங்கு இருக்கவில்லை. அத்தோடு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானதாகத் தமது நிலைப்பாடு இல்லாதுவிடின்.கூட சமாதான முயற்சிகளில் தம்மால் முட்டுக்கட்டைகள் போடப் பட்டுள்ளதானதொரு அபிப்பிராயம் வெளிவருவதிலும் அது விருப்பம் கொண்டிருக்கவில்லை.

இந்தியாவின் இத்தகைய நிலைப்பாட்டை புதியவெளி விவகார அமைச்சர் நட்வர்சிங் “இலங்கைக்கு இப்பொழுது அமைதி தேவைப்படுகின்றது. விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகக் கூடும். இந்நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்கு நாடுகடத்த வேண்டும் என்பது இப்போதைக்கு நமக்கு முக்கியமான விடயம் அல்ல.” எனத் தெரிவித்த கருத்துக்களே வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்தியாவின் புதிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு பல காரணிகள் இருக்கக் கூடும். முதலில் கடந்தகால பட்டறிவானது இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அவசரப்பட்டு தீர்மானம் ஒன்றிற்குச் செல்வதை அது தடுத்திருக்கக் கூடும் அதுமட்டுமல்ல இந்தியாவில் தற்பொழுது ஆட்சியில் இருப்பது ஒரு கூட்டணி அரசாங்கம் ஆகும். இவ் அரசாங்கம் கூட்டணிக் கட்சிகளிடையில் குறைந்த பட்ச பொது வேலைத் திட்டத்துடன் செயற்படுவதோடு வெளியில் இருந்து ஆதரிக்கும் இடது சாரிக்கட்சிகளின் ஆதரவையும் அது தக்கவைத்துக் கொள்ளுதல் அவசியமான தாகும்

இதில் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் தமிழ் நாட்டில் உள்ள தி.மு.க. தலைமையிலான கூட்டணி முக்கிய பங்குதாரிகள் ஆகும். ஆகையினால் இலங்கைத் தமிழர் விவகாரத்தை கையாள்கையில் இக்கூட்டணியின் உணர்வுகளும் ஓரளவேனும் கருத்திற் கொள்ளப்படுதல் அவசியமானதாகும். ஏனெனில் இக் கூட்டணியினரிடம் 30 பாராளுமன்ற ஆசனங்கள் உண்டு.

அடுத்ததாக இடதுசாரிக்கட்சிகளும் காங்கிரஸ் கட்சியின் தனிப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்றவகையிலான வெளியுறவுக் கொள்கைக்கு அனுமதிப்பார்கள் என்பதற்கில்லை இந்நிலையானது காங்கிரஸ் கட்சி கடந்த காலத்தைப் போன்று தவறானதொரு அணுகுமுறையை கைக்கொள்ளமாட்டாது. என்பதை மட்டுமல்ல. அத்தகையதொரு தவறான கொள்கை அடிப்படையில் அது செயற்பட முற்பட்டாலும்கூட அதற்கான வாய்ப்புக்கள் சற்றுக் குறைவாகவே உள்ளது.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி ஐ.ம.சு முன்னணியினரோ எதிர்பார்த்த வேகத்திலும் எதிர்பார்த்த வகையிலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு என்பது உடனடியாக சாத்தியமான தாகவில்லை. இந்நிலையில் இந்தியாவுக்கான காத்திருத்தல் என்பது சனாதிபதி சந்திரிகாவிற்கு ஒருவகையில் சவால் நிறைந்த தொன்றாகவே உள்ளது எனலாம்.

ஏனெனில் உள்நாட்டு அரசியல் சூழ்நிலையானது ஆளும் சிறுபான்மை அரசாங்கத்திற்கு சாதகமான தொன்றாக இல்லை. சுருக்கமாக கூறுவதானால் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்கள் நிறைவுற்ற நிலையிலும் நான்கு பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றுள்ள நிலையிலும் தனது பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கத்தால் நிரூபிக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கான சூழ்நிலையும் உருவாகுவதாக இல்லை. மாறாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டுள்ளன. குறிப்பாக நான்காவது பாராளுமன்ற அமர்வில் ஆளும் தரப்பினர் மேற்கொண்ட அடாவடித்தனமான நடவடிக்கையின் பின்னர் எதிர்க்கட்சியினர் ஒன்று திரண்டு அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலை தோன்றியுள்ளது.



இந்நிலையில்தான் நோர்வேயின் சமாதான முயற்சிகள் குறித்தும் விடுதலைப புலிகளுடனான பேச்சுவார்த்தை பற்றியும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் பிரஸ்தாபிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதாவது அரசாங்கம் உடனடியாக கவிழ்க்கப்படாது பாதுகாத்துக்கொள்ளத்தக்கதற்கான நடவடிக்கைகளாகவே இது நோக்கத்தக்கது.

சனாதிபதி சந்திரிகாவின் முன்நோக்கிய அடிகளும் பின்நோக்கி நகருதலுமான இந் நடவடிக்கையானது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எத்தகைய நம்பிக்கையையும் தூண்டக்கூடியதொன்றல்ல சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராவதானால் உறுதியான நிலைப்பாடும், சவால்களை எதிர்கொள்வதற்கான துணிவும் அவசியமானதாகும்.

ஆனால் ஜே.வி.பி.யிடம் அரசாங்கததின் மூக்கணாங் கயிற்றை கொடுத்துவிட்டு அதனை வழிநடத்திச் செல்ல சனாதிபதி சந்திரிகா முற்படுவதானது ஒருவகையில் ஆபத்தானதாகவும் ஒருவகையில் அனுதாபத்திற்குரியதாகவுமே உள்ளது. இத்தகைய தெரு சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகா உளப்பூர்வமாக விரும்பினால் கூட சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சாவாலை முன்னெடுத்துச் செல்வது சாத்தியப்படமாட்டாது.

ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டுமானால் சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளுடனேயே கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டும். சமாதானத்திற்குஎதிரான சக்திகளுடனேயே கூட்டணி வைத்துக்கொண்டு சமாதானம் பற்றி பேசுவது உலகை ஏமாற்றும் முயற்சீயாகவே இருக்கும் மாறாக தமது கூட்டணி பற்றிப் புரிந்து கொள்ளாது சமாதானம் பற்றி பேசினால் தம்மையே ஏமாற்றும் செயலாகவே இருக்கும் .

-ஜெயராஜ்

# வெளிச்ச வீடுகளை மீள இயக்குக!

## யாழ்.மாவட்ட மீனவ சங்கங்கள் கோரிக்கை

**யாழ். குடாநாட்டில் தற்போது மீன்பிடித்தொழில் சற்று மேம்பாடு அடைந்து வருகின்ற நிலையில் படையினரது ஆக்கிரமிப்பின் கீழுள்ள வெளிச்சவீடுகளை விடுவித்து, மீள இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென குடாநாட்டிலுள்ள மீனவ சங்கங்கள் பலவும் கோரிக்கைகள் விடுத்துள்ளன.**

தற்போது பரவலாக மீன்பிடித் தொழிலில் சற்று முன்னேற்ற கரமானதோர் நிலை ஏற்பட்டுள்ளதாக அம்மீனவ சங்கங்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு ஆழ் கடலுக்குச் செல்லும் படகுகளில் பல மீளக் கரை திரும்புகையில் வெளிச்சவீடுகள் செயற்படாமையினால் பல கஷ்ரங்களை எதிர் கொள்கின்றன.

குறிப்பாக காங்கேசன் துறை கடற்படைத்தளத்தை அண்டிய பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயமெனப் படைத்தரப்பு பிரகடனப் படுத்தியுள்ளது. இதனால் வடமராட்சி மற்றும் வலிகாமம் வடக்கு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் மேலும் தெரிவிக் கப்படுகிறது.

இவ்வாறானதோர் நிலையாலேயே மீனவர்கள் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அத்துமீறிப் பிரவேசிக்கின்ற சம்பவங்கள் இடம்பெறுவதால் வெளிச்ச வீடுகளை மீள இயக்கவேண்டுமெனவும், கரையோரப்பகுதிகளில் வீதி மின் விளக்குகளைப் பொருத்துமாறும் கோரப்பட்டுள்ளது. (27)

# சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை

### -வவு.இல் வன்னியன் படை துண்டுப்பிரசுரம்

"சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தண்டிக்கப்படுவர்" என 'வவுனியாவில் புதிய வன்னியன் படை' என்று விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அந்தப் பிரசுரத்தில் சமூக விரோத செயற்பாடுகளில் நாட்டம் உடையவர்களும், ஈழக்கோட்பாட்டிற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் தொடர்புடையவர்களும் மற்றும் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை அச்சுறுத்தல்கள், கசிப்பு விற்பனை போன்றவற்றில் ஈடுபடுவர்கள் மற்றும் இவற்றின் பின்னணியில் இருப்பவர்களையும், தன்னலம் கருதிச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் கட்சிகளைச் சார்ந்தவர்களின் செயற்பாடுகளையும் தாம் இனங்கண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் செயற்பாடுகள் மேலும் அதிகரிக்குமாயின் அவர்கள் ஒவ்வொருவரும் கடும் தண்டனைக்கு உள்ளாகுவார்கள் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துவதாகவும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (21)



கொடிகாமம் சந்தைக்கடைத் தொகுதியின் புதிய பொது மண்டபம் திறப்பு விழாவின் போது மண்டபத்தின்- நாடாவை வெட்டித் திறந்து வைப்பவரான பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் k.ராசையா அவர்களுடன் அருகில் சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் ந.பாலச்சந்திரன்.

## 30இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சியில் உள்ள வரணி மகாவித்தியாலயத்தின் கட்டட அபிவிருத்திப் பணிகளுக்கு என ஜேர்மன் தொழில் நுட்ப' நிறுவனம் 30இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பாடசாலையின் வசதியீனங்களை கவனத்தில் கொண்டே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியில் மேற்படி பாடசாலையில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. (33)

# சாவகச்சேரி நகரசபை மீது வணிகர்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி மரக்கறிச் சந்தையை மீண்டும் பழைய இடத்தில் இயக்கக்கோரி சாவகச்சேரி வணிகர் மன்றம் எடுத்துவரும் முயற்சிகளை நகரசபை புறக் கணித்து வருகிறது, இதனால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இருபத்தெட்டுக் கடைகளையும் திறக்கமுடியாத நிலையில் வணிகர்கள் உள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையிடம் மூன்று தடவைகள் மகஜர் அனுப்பியும் அதற்கு உரிய பதிலையோ, நடவடிக்கையையோ எடுக்காதது இப்பகுதி வணிகர்களின் நலனை பாதிப்பதாக உள்ளதென இப்பகுதி வணிகர்கள் தெரிவிக்கின்றனர்.

## தையற் பயிற்சி

யாழ். தென்மராட்சி வரணி மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப்பிரிவின் கீழ் இலவசத் தையற் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு இருக்கும் யுவதியரின் சுய தொழில் ஊக்குவிப்புகளை மையமாகக் கொண்டே இத்தையற் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சிகளில் ஏராளமானோர் பங்குபற்றிப் பயன் பெற்று வருகின்றனர். (33)

# யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இசை நாடகப் பெருவிழா

யாழ்.மாவட்ட திருமறைக் கலாமன்றத்தின் இசைநாடகப் பெருவிழா எதிர்வரும் 2,3,4ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது. யாழ்.மாவட்டத்திலுள்ள இசைநாடகக்கலைஞர்களைச் சிறப்பிக்கும் விதமாகவும், தமிழரின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான இசைநாடகம் பற்றிய அறிவினைக் கலைஞர்களிடையே ஏற்படுத்துவதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவில் சிறந்த இசைநாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளதுடன், இசை நாடகங்கள் பற்றி இசைநாடகக் கலைஞர்களிடையே அறிவினை வளர்க்கும் செயலமர்வுகளும், கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன. (33)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொலிகண்டியிலுள்ள கந்தவனம் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகள் ஆலய வருடாந்த உற்சவம் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ் வுற்சவத்தின் 1,2ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்தம் ஆகிய உற்சவங்களும் இடம்பெறவுள்ளன. (33)

# சின்னத்தம்பிப் புலவரின் சிலை மீளமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். சண்டிலிப்பாயில் உள்ள கல்வளை விநாயகர் ஆலய முன்றலில் சின்னத்தம்பிப் புலவரது சிலை மீளமைக்கப்பட்டுள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தலைசிறந்த புலவர்களுள் ஒருவராக விளங்கிய சின்னத்தம்பிப் புலவரின் நினைவாக கல்வளை விநாயகர் ஆலய முன்றலில் சிலை ஒன்று நிறுவப்பட்டிருந்தது

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் மூலம் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமித்த படையினர் இங்கிருந்த தமிழ் மக்களின் நினைவாலயங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் உடைத்தழித்த போது மேற்படி சிலையும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

இவ்வாறு இடித்து தரைமட்டமாக்கப்பட்ட பழம் பெரும் தமிழ்ப்புலவரது சிலை மீளமைக்கப்படல் வேண்டும் என யாழ். மாவட்ட புத்திஜீவிகள் விடுத்து வந்த கோரிக்கை களுக்கிணங்க மேற்படி சிலைமீளமைக்கப் பட்டுள்ளது. (32)

# தொழிலாளர் சான்றிதழ் கற்கைநெறிக்கு யாழ்.பல்கலையால் விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் சுயதொழில், கைத்தொழில் ஆகியவற்றில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது தரம் 9 இற்கு மேல் கல்விகற்றோர் இத்தொழிலாளர் சான்றிதழ் கற்கைநெறியைத் தொடரலாம். இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலதிகவிபரங்களைப் பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



கொடிகாமம் மத்தி முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.ரத்தினம் அவர்கள் ஏற்றி வைப்பதையும் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மற்றும் மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் திருநாவுக்கரசு ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

### க.பொ.த.மாணவர்களுக்கு

# தொடர்புசாதன தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர மாணவர்களுக்குத் தொடர்புசாதனத் தொழில் நுட்பமும் ஒரு பாடமாக அறிமுகப் படுத்தப்படவுள்ளது. கலை, வர்த்தகம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அடுத்த வருடம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ள இப்பாடத் திற்கான சுற்றறிக்கை கல்வித் அமைச்சினால் சகல கல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. உயர்தர மாணவர்களுக்கான தொடர்புசாதனத் தொழில் நுட்பப் பாடம் அறிவியல்சார் பாடமே தவிர இது பரீட்சைக்கான பாடமாக அறிமுகப் படுத்தப்படாது எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (33)

# சுய தொழிலை ஊக்குவிக்க "நீர்ப்" நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கிராம மட்ட அமைப்புக்களூடாகத் தொழில் முயற்சிகளை வழங்கிவரும் போதனாசிரியர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை "நீர்ப்" எனும் உதவும் அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமமட்ட அமைப்புக்களூடாக தையற் பயிற்சிகளை வழங்கி வரும் 13 போதனாசிரியர்களுக்குத் தலா ஒவ்வொரு துவிச்சக்கரவண்டிகளை இவ்வமைப்பு முற்கட்டமாக அன்பளிப்புச் செய்துள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு இளையவர்களின் மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டு வழங்கப்படும் இவ்வாறான தொழிற் பயிற்சிகளை விஸ்தரிப்புச் செய்வதற்காகவே "நீர்ப்" அமைப்பு இவ் வுதவிவழங்கல்களையும், ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. (33)

# நிறுவைகள், அளவைகள் கருவிகள் முத்திரையிடல்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, வர்த்தக நிறுவனங்கள், ப.நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகளுடைய அளவைக் கருவிகளுக்கு பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளது. எதிர்வரும் 14.06.2004 முதல் 22.06.2004 வரை காலை 9.00 மணியில் இருந்து பிற்பகல் 1.30 மணிவரை சாவகச்சேரி பிரதேசசபை உபஅலுவலகத்தில் இதற்கான பணிகள் நடைபெறவுள்ளதால், வர்த்தகர்கள், வியாபாரிகள் பயன்பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# காஷ்மீர் சிக்கலுக்குள் இந்திய-பாகிஸ்தான் சமாதானம்?

## அ.கலைவாணி

இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் சமாதானம் பற்றிப் பேசத் தொடங்கியுள்ளன. இரு நாடுகளும் சமாதானம் தான் தமது உயிர் மூச்சு என்பது போலவே தான் அறிக்கைகளை வெளியிடத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் இவை எந்தளவு தூரம் சாத்தியப்பட்டவை என்பது கேள்விக்குரியவையே.

ஏனெனில் இந்தியாவில் ஆட்சி மாறியிருக்கின்றது. புதிய மன்மோகன்சிங் அரசு பாகிஸ்தானுடன் சமாதானம் ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்திருக்கின்றது இவ்வாறு தான் முன்பும் ஆட்சியிலிருந்த பாரதிய ஜனதா அரசும் சமாதானத்தில் ஆர்வம் போல் காட்டிக் கொண்டது. சமாதானம் சமாதானம் என்று அடிக்கடி கூறிக்கொண்டது. அறிக்கைகளை வெளியிட்டது. பாகிஸ்தான் சமாதற்குள் புதியமக்களவைத் தேர்தலும் வந்துவிட்டது. தேர்தலில் வெற்றிபெறுவோம். மீண்டும் ஆறாண்டுகள் பாகிஸ்தானுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பது பாரதிய ஜனதாவின் எண்ணமாக இருந் திருக்க முடியும் என்பது அவதானிகளின் கருத்து.

பாரதிய ஜனதா அரசு செய்தது போலவே தான் புதிய காங்கிரஸ் அரசும் செய்யவுள்ளது போலுள்ளது.

ஏனெனில் காங்கிரஸ் அரசு பதவியேற்று அதிககாலம் செல்லவில்லை. அதற்குள்ளே "எப்போது பாகிஸ்தான் எல்லை கடந்த பயங்கரவாதத்தை விடப்போகின்றது...?" என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வந்சிங் வினா எழுப்பியிருக்கின்றார்.



முஷாரப்-புதிய பிரதமர் மன்மோகன் சிங் (இன்று)

அதனால்தான் இந்த வருட இறுதியில் தனது அக்னி 3 ரக ஏவுகணையைப் பரீட்சித்துப்பார்க்க நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

இந்த ஏவுகணை சாதாரணமானதல்ல. பாகிஸ்தான் 1500 கிலோமீற்றர் இலக்கு வைக்கும் ஏவுகணையைத் தான் தன்னிடம் இருப்பதாகக் காட்டியுள்ளது. இந்தியாவோ பாகிஸ்தானின் ஏவுகணையின் இலக்குத் தூரத்தின் இரண்டு மடங்கு இலக்கைத் தாக்ககூடியதை தான் இந்த ஆண்டின் இறுதியில் பரீட்சிக்கவுள்ளது.

ஆகமொத்தம் இருநாடுகளும் சமாதானம் என்னும் போர்வையில் தமது ஆயுத பலத்தைக் காட்டுவதில் தான் அதிக கவனம் செலுத்துகின்றனவா... எனும் வினாவைத் தவிர்க்கமுடியவில்லை.

ஏனெனில் சமாதானம் பற்றிய விருப்புடையவர்கள் சமாதானத்திற்கான திறவுகோலைத்தான் நாட வேண்டும் ஆனால் சர்வதேச சமூகத்திற்கு மட்டும் சமாதானம் பற்றி உதட்டளவில் இருநாடுகளும் காட்டிக் கொள்கின்றன. திரை மறைவில் தமது பலத்தைக்காட்டுவது போன்றே நடத்தப்பட்டுள்ள நடாத்தப்பட இருக்கின்ற ஏவுக ணைப் பரிசோதனை எடுத்தியம்புகின்றது.

இதேவேளை இந்தியாவும் பாகிஸ்தானும் தம்மைப் பலசாலிகள் என்று காட்டுவது போலவே, தம்மை சமாதானத்தின் பிரியர்களாகவும் காட்டத்தவறவில்லை எனலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாகத் தான் பாகிஸ்

எனவே காஷ்மீர் பிரச்சினைக்குத் தான் இரு நாடுகளும் முதலில் தீர்வை எட்ட வேண்டும். ஆனால் இதுவரை காஷ்மீர் பற்றி இருநாடுகளும் வாயைத்திறப்பதாகத் தெரியவில்லை.

பாகிஸ்தான் தன் வசப்படுத்தியுள்ள அஷாத் காஷ்மீரை இந்தியாவுக்கு விட்டுக் கொடுப்பதற்குத் தயாராகவில்லை. இதே போன்று இந்தியாவும் தன்வசம் உள்ள ஜம்மு-காஷ்மீரை பாகிஸ்தானுக்கு தாரை வார்ப்பதிலும் உடன்பாடில்லை.

அதனால் தான் முன்னர் வாஜ்பாய் அரசு கூட காஷ்மீர் தவிர்ந்த ஏனைய பிரச்சினைகளை மட்டும் தான் அதிக முக்கியம் போன்று சனாதிபதி முஷாரப்புடன் கதைத்திருக்கின்றது.

பதிலுக்கு பாகிஸ்தானும் காஷ்மீர் பற்றி இந்தியாவுடன் கதைப்பதற்கு விரும்பவில்லை. இதனால் காஷ்மீர் மக்கள் தான் துன்பப்படுகின்றார்கள் என்பதை இரு நாடுகளும் உணர்ந்து கொள்வதாக தெரியவில்லை.

மாறாக காஷ்மீரை விட்டுக் கொடுப்பது என்பது அவமானமாகவும், இழுக்காகவும், பலங்குறைவு என்றும் இருநாடுகளும் கருதுவது போன்று தான்நடந்து கொள்கின்றன.

எனவே காஷ்மீர் சிக்கலைத் தீர்த்துக் கொள்வதில் இரு நாடுகளும் தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்க ஒரு கணம் கூடத்தயாராக இல்லை.

புதிதாக பதவி ஏற்றுள்ள காங்கிரஸ் அரசு கூட இதுவரை பாகிஸ்தானுடன் வெறுமனவே சமாதானம் என்றுதான் பேசுகின்றதே தவிர காஷ்மீர் பற்றி இதுவரை பேசியதாகத் தெரியவில்லை.

ஆக மொத்தம் இந்தியா பாகிஸ்தானில் அரசுகள் மாறுகின்றதே தவிர அவற்றின் கொள்கைகள்எதுவும் மாறுவதில்லை.

தானத்தை விரும்பவில்லை என்பது போல இந்தியா வெளியுலகிற்குக் காட்டியும் கொண்டது.

கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளாக இந்தியாவும், பாகிஸ்தானும் சமாதானம் பற்றி அறிக்கைகள் மூலம் நிறையத்தரம் பேசியிருக்கின்றன. ஆனால் தமது ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தானுடன் நிரந்தர சமாதானத்தை வாஜ்பாய் அரசால் எட்டமுடியவில்லை.

ஏனெனில் சமாதானம் பற்றி பேசும் போதே இரு நாடுகளும் ஒன்றையொன்று ஏடாகூடமாக சாடலில் ஈடுபடும். பின்னர் அது மறையும்போது மீண்டும் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கப்படுவதில்லை. முதலில் இருந்தே ஆரம்பமாகும்.

இதனால் இருநாட்டு வெளியுறவு இணை அமைச்சு மட்டப் பேச்சுவார்த்தையில் இருந்து இரு நாடுகளும் இதுவரை அடுத்த படிக்கு நகர முடியாமலேயே போய்விட்டது.

நான்கு கட்டம் என்று தொடரப்பட்ட பேச்சுவார்த்தை வெளியுறவு இணை அமைச்சு மட்டத்துடன் நிறுத்தப்படும் அவல நிலை உருவானது.

ஏனெனில் தற்போது முதற்கட்டம் முடிவ


இந்த வினா பாகிஸ்தானுடன் சமாதானத்தை விரும்புவது போல வெளித் தெரியவில்லை. மாறாகப் பாகிஸ்தானை உசுப்பிவிடுவதுபோலவே வெளியுறவு அமைச்சரின் வினா இருப்பதாகச் சந்தேகம் கொள்ளவைக்கிறது.

இதேவேளை பாகிஸ் தான் தனது கோரி ஏவுகணைகள் இரண்டை பரிசோதனை செய்துள்ளது. இந்தியாவுடன் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும். காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று கூறும் பாகிஸ்தான் அடுத்தடுத்து 1500 கிலோமீற்றருக்கப்பால் தாக்கக்கூடிய நடுத்தர வீச்சு ஏவுகணையைப் பரிசோதனை செய்திருக்கின்றமை தென்னாசியாவை மட்டுமல்ல இந்தியாவையும் சலனப்படுத்தியிருக்க முடியும்.

அதாவது வெளியரங்கில் சமாதானம் பற்றி பாகிஸ்தான் பேசுகின்றது. திரைமறைவில் தருணம் கிடைத்தால் கத்தியை மார்பில் பாச்சவும் தயார் என்பதுபோல ஏவுக ணைப் பரிசோதனை நடத்துகின்றது. இது இந்தியாவுக்கான எச்சரிக்கையே அன்றி வேறில்லை என்றுதான் இந்தியா திட்டவட்டமாக நம்புகின்றது.

அதனால்தான் வெளியுறவு அமைச்சர் அவ்வாறு வினா எழுப்பியதாக வாதிடுவோரும் இல்லாமல் இல்லை. இதேவேளை திரைமறைவில் பாகிஸ்தானின் ஏவுகணை பரிசோதனை எச்சரிக்கையை இந்தியா சவாலாக எடுத்துவிட்டது போலுள்ளது.

தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை பாகிஸ்தான் வருமாறு அழைப்பு விடுத்துள்ளமையும், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பாகிஸ்தான் செல்வார் என்றும், அவ்வாறு செல்வது இருநாட்டு சமாதானத்திற்கும் உத்வேகமாக அமையும எனும் காங்கிரஸாரின் கருத்தும் சான்றாக அமைகின்றது.



முஷாரப்-முன்னாள் பிரதமர் வாஜ்பாய் (அன்று)

எனவே காங்கிரஸ் அரசும் தனது ஆட்சிக்காலத்தில் பாகிஸ்தானுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அதீத ஈடுபாட்டுடன் செயற்படாமல், பட்டும் படாமலும் தனது ஆட்சிக் காலத்தை கழிக்கவும் முற்படக்கூடும் என்றும் எதிர் பார்க்க முடியும்.

ஏனெனில் இரு நாடுகளும் தமக்குள் தீர்க்க முடியாத சிக்கலாக வைத்திருப்பது காஷ்மீர்தான். காஷ்மீரை இருநாடுகளும் விட்டுக்கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

இது அப்பட்டமான உண்மை. அதனால் தான் இதுவரை கடந்த 57ஆண்டுகளாக இருநாடுகளும் சமாதானத்தை காணமுடியாமல் இருந்து வருகின்றன.

மாறவும் மாட்டாது.

இந்த வகையில் பார்க்கும் போது 57வருடமாக காணப்படாத இருநாட்டு சமாதானமும் வெகுவிரைவில் ஏற்பட்டு விடும என்று கூறுவதும், நம்புவதும் இயலாத காரியம்.

ஒன்று மட்டும் தெளிவாகின்றது. இந்திய-பாகிஸ்தான் சமாதானம் என்பது வெகு தொலைவில் தான்; மிகஅருகில் இல்லை. இருநாடுகளும் வெகுவிரைவில் சமாதானம் காண்பதாகக் கூறுவது வெறும் கானல் நீரன்றி வேறில்லை.

# தற்போதைய அரசை கவிழ்க்க ஜா.ஹெல உறுமய ஆதரவளிக்காது

## - எல்லாவெல மேதானந்ததேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கோ அன்றி மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கோ ஜாதிக ஹெல உறுமய கட்சி எந்தக் குழுவிற்கும் ஆதரவு வழங்க மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாவெல மேதானந்ததேரர் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்ட மொன்றில் கருத்துக் கூறுகையில் தமது கட்சியின் இந்த நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.இதேவேளை அத்துரலிய ரத்தினதேரர் தெரிவிக்கையில் ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்தும் ஒரு சுயாதீனமான குழுவாக இயங்கும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய உடுவோதம்ம லோகதேரர், சத்தொழுவே ரத்னசீலதேரோவை பாராளுமன்ற அங்கத்துவப் பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

# டாக்டர் லக்ஷ்மன் வழங்கும் சிகிச்சை 26,27-கிளிநொச்சியில் நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

கொழும்பு தேசியவைத்தியசாலையில் பணிபுரியும் இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் லக்ஷ்மன் அவர்களினால் எதிர்வரும் 19 ,20ஆம் திகதிகளில் கிளி/மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவிருந்த இருதயநோய் தொடர்பான சிகிச்சைகள் மற்றும் ஆலோசனை வழங்கல் என்பன தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினங்களில் நடைபெற மாட்டாதென கிளிநொச்சி மருத்துவசங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிசிச்சைகள் எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் கிளி/மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், ஏற்கனவே மாவட்ட வைத்தியசாலையில் பதிவுகளை மேற்கொண்டவர்கள் இத்திகதிகளில் வருகை தந்து சிகிச்சை மேற்கொள்ளும் வண்ணமும் கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினர் வேண்டியுள்ளனர். (சோ,கு)

# குனித்துப்போயுள்ள பௌத்த துறவிகள்

"கொள்கைகளை ஒருபுறம் வைத்து விட்டுப் பொது எதிரிக்கு எதிராக ஒன்று சேர வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். எதிர்க்கட்சிகளை அழிக்க நினைக்கும் ஆளும் கட்சியின் நடவடிக்கைகளை முறியடிக்க ஒன்றினைய வேண்டும்" இது இப்போது ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு.இதிலே குறிப்பிட த்தக்க விடயம் என்ன வென்றால் தமிழரசுக்கட்சியுடனும் அது கூட்டுச சேரத் தயாராகவுள்ளது என்பதுதான்.

ஜாதிகஹெல உறுமயவைத் தேர்தலில் இறங்க, அதிலும் குறிப்பாகப் பிக்குகளைத் தேர்தலில் இறக்கத் தூண்டியதும், அதற்கு, நிதியுதவி அளித்ததும் ஐக்கிய தேசியக் கட்சிதான் என்பது அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்ற விடயம். ஐ.தே.க. இவ்வாறு ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் அதற்குக் காரணமும் உண்டு. ஐக்கிய தேசியக் கட்சி முழுக்க முழுக்க தனது சமா தான நடவடிக்கையையே தேர்தல் முதலீடா கக் கொண்டிருந்தது. இந்நிலையில் ஐ.தே.க. வின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான வாக்குகள் முழுவதும் ஒரேயிடத்தில் குவி வதை விரும்பாது இந்நடவடிக்கையில் ஈடுபட் டது. அவ்வாறாயின் அதில் அதற்கு வெற்றி யும் கிடைத்திருக்கிறது எனலாம்.

இப்பொழுது ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்தில் இருப்ப தனால் பெரிதும் ஆத்திரம் கொண்டிருப்பது ஆளும் கட்சியாகும். இந்த ஆத்திரத்தின் வெளிப்பாடு சிறிலங்காவின் 4 பாராளு மன்ற அமர்வுகளிலும் வெளிப்பட்டது. அது நான்காவது அமர்வில் பௌத்த பிக்கு களைத் தாக்கும் அளவிற்குச் சென்றுள் ளது.

பௌத்த துறவிகளுக்கு சிறிலங்காவில் வழங்கப்படும் கௌரவம் அதியுயர்வான தாகும். பௌத்தம் அரச மதம் அதனைப் பாதுகாக்கும் பௌத்த துறவிகள் மிக மரியாதைக்குரியவர்களாக இருந்து வருகின்றனர். பௌத்த துறவிகளுக்கு சமனாக உயர் தலைவர்கள் கூட இருக்கை யில் அமர மறுக்கும் பாரம்பரியம் சிறி லங்காவில் நீண்ட காலமாக நிலவிவரு கின்றது. ஆனால், பௌத்த துறவிகள் வெளிப்படையாகவே தாக்கப்படும் சம்ப வங்கள் கடந்த தேர்தலுக்கு ஜாதிக ஹெல உறுமய நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதன் பின் அதிகரித்த போக்கில் செல் கின்றது.


**வேலவன்**

தேர்தலில் போட்டியிட்ட பிக்கு வேட் பாளரை 15 பேர் இணைந்து தாக்கிய சம்ப வம், தேர்தலில் போட்டியிட்ட பௌத்த பிக்கு வின் விகாரையின் வாசலில் கறுப்புக் கொடி கட்டிய சம்பவம் எனத் தொடர்ந்த இந்த நடவடிக்கையானது பாராளுமன்றத்திலும் நீடித்துச் செல்கின்றது.

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்குச் சில தினங்களுக்கு முன் இரு பிக்குகள் காணாமல்போய் பின்னர் ஆளும் கட்சிவரிசையில் தோன்றியமை, இரண்டா வது அமர்வின் போது அவர்களில் ரத்தொளுவ ரத்னசீக தேரர் மீண்டும்காணாமற் போனமை பின் தான் பதவியை விட்டு விலகு வதாக அறிவித்தமை, பின்னர் தன்னைக் கடத்திக் கொண்டு சென்று மிரட்டி பதவி விலகல் கடிதம் பெற்றதாக அறிவித்தமை, பின் நான்காவது தடவை கூடியபோது அக்மீமன தயாரத்ன தேரர், வணகொலன் னாவ சுமங்கள தேரர் ஆகியோர் தாக்கப் பட்டமை என்பன பிக்குகள் மீதான வன் முறையின் அதிகரித்த போக்கையே காண்பிக்கிறது. வீதிகளில் வைத்து மிரட்டப்பட்டமை, தாக் கப்பட்டமைக்கு அப்பால் அதியுயர் சபை யாகிய பாராளுமன்றத்தில் வைத்து இவர்கள் தாக்கப்பட்டுள்ளமை, அதிலும் பௌத்த மதத்திற்கு அரச அந்தஸ்து வழங்கிய சபை யிலேயே தாக்கப்பட்டமை ஒரு சாதாரண விடயமல்ல.

இத்தாக்குதலையடுத்து பாராளுமன்றத் தில் ஆளும் கட்சியினர் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கூறியது ஜாதிகஹெல உறுமயவை பாராளுமன்றத்தில் செயற்படவிடாது தடுப்ப தாக ஏற்கனவே குற்றஞ்சாட்டி வந்த அக்கட்சி இப்பொழுது இந்தப் பயங்கரவாதத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்





திருக்கின்றது.

இதிலே முக்கியமானது அவர்கள் இது வரை காலமும் பயங்கரவாதிகள் (இன்ன மும்கூட அவர்கள் அக்கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை) என வர்ணித்தோருடன் கூட்டுச் சேரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ள மையாகும்.

"பாராளுமன்றச் சம்பவம்" தொடர்பாக சனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்ப வென அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து அனுப்பவுள்ள கடிதத்தில் பாராளு மன்றத்தில் இடம்பெற்ற சம்பவம் "பயங்கர வாதம்" என வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் ஜாதிக ஹெல உறுமயவும் கையொப்பமிட்டிருந்தது.

எனவே, இப்பொழுது யாருடன் இணைந்து பயங்கர வாதத்திற்கு எதிராக போராட பௌத்த பிக்குகள் முயன்றனவோ. அவர்களுக்கு எதிராகப் "பயங்கரவாதி" களுடன் இணைந்து போராட வேண்டிய நிலையில் உள்ளது.

இதேவேளை, இந்த இடைவிடாது தொடரும் மோதல்களும், அதன் பின்னான ஜாதிக ஹெல உறுமயவின் செயற்பாடும் இவர்களின் தேசப்பற்று எவ்வளவு தூரம் என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த ஆண்டின் முற்பகுதி வரை "தேசப்பற்றுடன்" இணைந்து ...ற்பட்டவர்களின் உள் நோ...கம் இப்...ழுது வெளித்து வரு கின்றது. இவர்களின் தேசப்பற்று என்பது உண்மையில் இனவாதத்தைத் தூண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்று வதேயொழிய உண்மையில் தேசத்தைக் காப்பற்றுவதல்ல என்பது இப்பொழுது வெளிப்பட்டு வருகின்றது.

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட பௌத்த பிக்குகள் சிலர். முன்வந்தமையானது அல்லது அவர்கள் முன்னிறுத் தியமையானது ஹெல உறுமய எனும் பெயரில் இயங்கும் திலக் கருணாரட்ண, சம்பிக்க ரணவக்க, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் என தற்போதைய ஆட்சியாளர்களால் கறிவேப்பிலையாகத் தூக்கி எறியப் பட்டோரின் அதிகார ஆசையைவெளிப் படுத்தியது. இவர்கள் பௌத் தபிக்குகளை நேரடி அரசியலுக்குள் இழுத்து விட்டமை. பௌத்த பிக்கு களின் கௌரவத்தைப் பெரிதும் பாதித்தது.

பௌத்த மதம் அரச மதமாகவும், பௌத்த மதத்தை வளர்க்கப் பெரும் நிதியும் செலவிடும் நாட்டில் மதுபாவிப்போரின் தொகையைப் பார்த்தால் அது கவலைக்குரிய தொன்றாகும்.

"ஒரு மரண வீட்டுக்குப் போனால் பிரேதத்தை அனாதரவாக விட்டுவிட்டு அனைவரும் மது வெறியில் இருக்கின் றனர்" என ஒரு பௌத்த பிக்கு தெரிவித்தார். அந்தப் பிரேதமாக இருந்தவர் கூட முதல் தினம் வரை மது அருந்திக் கொண்டிருந்த வராகவே நிச்சயம் இருப்பார்.

இன்று குற்றச்செயல் கள் மலிந்த நாடாக பௌத் தத்தைப் பாதுகாப்பதாகக் கூறும் நாடு உள்ளது. இவற்றையெல்லாம் சீர்திருத்த வேண்டிய பௌத்த பிக்குகளின் நிலை அந்த வன்முறைக்குப் பலியாவதாக மாறியுள்ளது.

இதற்குக் காரணமாக தனியே சிறிலங்காவின் அரசியல் வ்ாதிகளை மட்டும் கூறிவிட முடியாது. ஏனெனில், அவர்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள எவரையும் எதுவும் செய்யத்தயார் நிலையிலேயே உள்ளனர் என்பதை கடந்த 25 ஆண்டு காலச் செயற்பாடுகள் புரிய வைத்துள்ளன.

தேர்தலில் வெற்றிபெற வன்முறையே ஒரே வழி என்பது சிறிலங்காவில் உள்ள பிரதான கட்சிகளின் தாரக மந்திரமாக உள்ளது. தற்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அனுபவவாயிலாக உணர்ந்து கொண்ட "உண்மை" என்ன வெனில், பொலிஸ், ஊடகத்துறை இரண்டு மின்றித் தேர்தலை எதிர்கொள்வது என்பது தோல்விக்கே இட்டுச் செல்லும் என்பதாகும்.

இதுஅரச இயந்திரத்தின் உதவியுடன் வன் முறையையும், பொய்ப்பிரச் சாரத்தையும் சட்டபூர்வமான தாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

இந்நிலையில், பௌத்த பிக்குகள் வன்முறையை எதிர்பாராது தேர்தலில் இறங்கியிருக்க முடியாது. பௌத்த பிக்குகள் என்பதற்காக சும்மாவிடமாட்டோம் என்பது தேர்தலில் இவர்கள் போட்டியிடப்போவ தாகச் செய்திகள் வெளியாகிய உடனேயே வெளிப்படுத்தப்பட்டது.

ஆனால், இவற்றையும் மீறி நாட்டைப் "பாதுகாக்க" எனக் கூறிக்கொண்டு அரசிய லில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகள் கள யதார்த்தத்திற்கு ஈடுகொடுக்க வேண்டியே யிருக்கும்.

இங்கு இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். அதியுயர் சபையில் வைத்து வணக்கத்துக்குரிய குருமாரைத் தாக்கியவர்களுக்கு எதிராககட்சி ஆதரவாளர்களைத் தவிர பௌத்த மக்கள் கிளர்ந்தெழவில்லை என்பதாகும். பௌத்த பீடங்கள் கூட இதில் பெரும் கரிசனை காட்டவில்லை.

இதனால், தனித்து விடப்பட்ட நிலை யிலுள்ள பௌத்த துறவிகள் தமக்காகத் தாமே போராட வேண்டிய நிலையில் உள்ள னர். பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி முதல் அமர்வுக்குச் செல்ல முன்னர் பிரத்தியேக ஆசனம், அதில் விரிக்க வெள்ளைத்துணி, சபாநாயகர் வருகையின்போது எவ்வாறு நடந்து கொள்வது? சபாநாயகர் வரமுன் பிரவேசிப்பதா? வந்த பின் பிரவேசிப்பதா? விசேட தங்குமிடம், உணவு எனப் பல விட யங்கள் பேசப்பட்டன.

இப்பொழுது "பாராளுமன்றப் பயங் கரவாதத்திலிருந்து" தம்மைப் பாதுகாக்க வழி தேட வேண்டியவர்களாக அவர்கள் உள்ளனர். □


**ஒவ்வொரு புதன் ஈழ நாதத்திலும்**

**"ஆதவனின் அனுபவ பகிர்வுகள்"**
**புதிய பகுதி-புதிய பத்தி**

யாழ். பல்கலைக்கழகத்தில் மெய்யியல்துறை விரிவுரையாளராகக் கடமை யாற்றி... சிறிலங்கா இராணுவத்தால் தேடப்பட்டு, புலம்பெயர் பெருவெளியில் 20 வருடங்கள் அஞ்ஞாதவாசம் புரிந்துவிட்டு, மீண்டும் தாய்மண் வந்துள்ள ஆதவன் - ஒவ்வொரு புதனிலும் உங்களோடு தன்னை இணைக் கிறார்.

**ஈழநாதம் வாசகர்களுக்கு நாம் தரும் புதிய விருந்து.**

# அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் இறைமையைப் பாதுகாக்க வேண்டும்

## வலியுறுத்தி ஹெல உறுமய சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்பு பொறளை பகுதியில் சத்தியாக்கிரகம் ஒன்றினை நடாத்தியுள்ளது. இதில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். அரசாங்கமும், எதிர்க்கட்சியினரும் நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே மேற்படி சத்தியாக்கிரகம் நடாத்தப்பட்டிருக்கிறது. இச்சத்தியாக்கிரகத்தில் உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாம் விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்கள் அல்ல என்றும் ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைக்கு எதிரானவர்கள் என்றும் குறிப்பிட்டார். தன்னாட்சி அதிகாரம் சம்பந்தமான விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறுமாக இருந்தால் தாம் அதற்கு எதிராகவே வாக்களிப்போம் எனவும் குறிப்பிட்டார். எதிர்கட்சிகள் வெவ்வேறு கொள்கைகளை கொண்டவையாயினும் நாட்டின் நலன்கருதி ஒரு பொது எதிரிக்கு எதிராக இணங்க வேண்டியுள்ளதால் பொதுவான எதிர்கட்சிக்கு தமது இணக்கத்தினையும் தெரிவித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (32)

# மட்டு. இல் உளநிலை பாதிக்கப்பட்டோரை தங்கவைக்க புனர்வாழ்வு மையம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் கடந்த காலங்களில் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் காரணமாக உளநிலை பாதிக்கப்பட்டோரை வைத்துப் பராமரிப்பதற்கென உளநோயியல் புனர்வாழ்வு மையம் ஒன்று மட்டக்களப்பு மாவடிவேம்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைத்துச் சிகிச்சையளிக்கப்பட்டு வரும் இவ்வாறான உளநோயாளர்கள் அனைவரும் நிறைவான சிகிச்சையைப் பெற்றுக்கொண்ட பின்னர் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக இந்த உள நோயியல் புனர்வாழ்வு மையத்தில் சேர்க்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் காரணமாகப் பாதிக்கப்பட்டு உளநலக் குறைபாடுகளுடன் திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். இவர்களின் புனர்வாழ்வுக்காக இம்மாவட்டத்திலும் இவ்வாறான நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ள அதேவேளை, நீலாவணையிலும் ஒரு நிலையம் அமைக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சை மேற்கோள் காட்டித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதானப் பேச்சிற்கான வாய்ப்பை ஏற்படுத்தத் தொடர்ந்து முயற்சிப்போம்

## நோர்வே அரசு அறிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தும் பொறுப்பைத் தொடர்ந்தும் முன்னெடுப்போமென நோர்வே அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

பிரதியமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் பாரபட்சமற்ற முறையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தமது நாடு திடசங்கற்பம் பூண்டிருக்கின்றது என்று தெரிவித்ததுடன், சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் இருதரப்புகளும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

தமக்கு வாழ்த்துத் தெரிவித்த நோர்வேத் தூதுவரை வரவேற்ற ரத்ன சிறிவிக்கிரமநாயக்க இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நோர்வே அரசு உதவி புரிந்ததற்கு நன்றி தெரிவித்ததுடன், தாம் பெருந்தோட்ட அமைச்சராகக் கடமையாற்றிய சமயம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க நோர்வே அரசு உதவி புரிந்ததையும் நினைவு கூர்ந்தார்.

அதேவேளை இலங்கைக்கான மியன்மார் இராஜதந்திரியும் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கவைச் சந்தித்து தமது நாடுகளுக்கிடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்வது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் எதிர்வரும் டிசம்பர் மாதம் 4ஆவது உலக பௌத்த மாநாட்டை மியன்மாரில் நடத்துவது பற்றியும் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## இறக்குமதியாளர் கவனத்திற்கு

வருவாய்ப்பகுதியில் இறக்குமதிக்கான உரிமத்தைப் பெற்று, இறக்குமதியிலீடுபடாத இறக்குமதியாளர் அனைவரையும் 2004.06.30 ஆம் நாளிற்கு முன் கிளிநொச்சியிலமைந்துள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்துக்கு நேரில் வருமாறு வேண்டுகிறோம். தவறுவோரின் உரிமம் நீக்கப்படுமென்பதை அறியத்தருகிறோம்.

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
வருவாய்ப் பகுதி,
நிதித்துறை.

(சி-9714)


# மட்டு. மாவட்டத்தில் இயங்க முடியாத முன்பள்ளிகளை இயக்குவதற்கு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்க முடியாத நிலையிலிருந்த முன்பள்ளிகளினை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

சிறார்களின் கல்வியினை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக தற்போது 20 முன்பள்ளிகளினை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பொறுப்பேற்று, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக நடாத்தி வருகின்றது.

அத்துடன் மேற்படி 20 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம், சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் இதர உதவிகளையும் த.பு.கழகம் வழங்கி வருவதுடன், அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான பயிற்சிகளை வழங்கி முன்பள்ளி செயற்பாடுகளையும் நெறிப்படுத்தி, அவற்றினைக் கண்காணித்து வருகின்றனர். இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 முன்பள்ளி ஆசிரியர்களும், 745 சிறார்களும் பெரும் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ, கு)

## நீங்காத நினைவினில் ஓராண்டு

14-06-2004

மண்ணின் மலராய்
30 - 11 - 1976



அழிவின் சொத்தாய்
14 - 06 - 2003

## கடற்புலி லெப். கேணல் அன்புக்குமரன்

(வல்லிபுரம் சிவகுமார்)

சிறிதர் வீதி, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

(சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் வணிகக் கப்பலைத்தாக்கிஅழித்தபோது வீரகாவியமானார்)

**வல்லை மண்ணில் பிறப்பெடுத்து வங்கக் கடலில் காவியமான - புயலே**
**உனை இழந்து ஓராண்டு ஆனதையா**
**கண்மணியே உன் பூ முகம் தேடுகின்றோம் - நீ எங்கு சென்றாய்?**
**கடலில் கயவன் பகையழித்து - பகைவென்ற வேளைதனிலே**
**காலத்தின் கட்டளைப்படி வங்கத்திலே**
**வணிகக் கப்பல் மீது உன் பணி தொடர்ந்தாய்.**
**சமாதான வேளையிலும் வஞ்சகரின் வஞ்சகத்தால் - உன்**
**உயிர் பிரிந்தாலும், ஆண்டுகள் பல ஆனாலும் - உன்**
**நினைவு எமைவிட்டு அகலாது.**

இதே தினத்தில் இவருடன் காவியமான 12 வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

14-06-2004 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவலைகளில் அனைத்துப் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.மு. இரணைப்பாலை வீதி,
5ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

**குடும்பத்தினர்.**

(4590)


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான நேர்முகத் தேர்வு பிற்போடல்

தமிழீழப் போக்குவரவுக்கழக ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான, 13.06.2004 ஆம் நாள் நடைபெறவிருந்த நேர்முகத்தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 16.06.2004 ஆம் நாள் புதன் காலை 9.30 மணி தொடக்கம் பகல் 02.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழகம், நடுவப்பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித் தகைமை, அகவை ஆகியவற்றின் உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(4586)

# போராட்ட வரலாற்றில் பல கடற்தாக்குதல்களை வழிநடத்தி வெற்றிகளைத் தேடித்தந்தவர் சாள்ஸ்

## லெப்.கேணல் சாள்ஸ் நினைவு மண்டபத் திறப்புவிழாவில் கேணல் சூசை

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல கடற்தாக்குதல்களை வழி நடத்தி, பெரும் வெற்றிகளை எமக்குத் தேடித் தந்தவராகவும், போராளிகளுக்குச் சண்டைகள் பற்றிய பல நுட்பங்களைக் கற்பித்த ஆசானாகவும் திகழ்ந்த ஒரு தளபதிதான் லெப்.கேணல் சாள்ஸ்.இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் முல்லைத்தீவில் லெப். கேணல் சாள்ஸ் நினைவாக அமைக்கப்பட்ட சாள்ஸ் நினைவு மண்டபத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அன்று ஆனையிறவுத் தளத்தை எம்மால் முழுமையாக வெற்றி கொள்ள முடியாத நிலை உருவாகியபோது நாம் ஒரு சிறிய கடல் அணியாகவே இருந்தோம். அதன் பின்னர் எமது கடல் அணி கடற்புலிகள் என்ற புதிய பெயருடன் புதிய அணியாகக் கட்டி எழுப்பப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் எமது அணிகள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அந்தக் காலப்பகுதியில் தான் எதிரிகள் ஏனைய பகுதிகளுடன் இருந்து யாழ். குடாநாட்டைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அந்த வகையில் யாழ். குடாவிற்கான தரைவழிப் பாதைகள் எதுவுமற்று கிளாலிக் கடல் நீரேரி ஊடாகவே ஏனைய பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உருவானது. அவ்வாறு மக்கள் பயணிக்கின்றவேளை சிறிலங்கா கடற்படையினர[ால்] கடலில் வைத்து மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இந்நிலையில் எமது கடற்புலிகள் கடற் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டு மக்களின் பயணத்துக்கான பாதுகாப்பினை வழங்கினர். இதில் சாள்ஸ் மிகவும் திறமையாகச் செயற்பட்டான்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளிடம் இருக்கின்ற வளங்களை வைத்துக்கொண்டு எதிரிகள் மீது மிகவும் நுட்பமான முறையில் தாக்குதல் நடத்தி சிறிலங்கா கடற்படையை எதிர்கொண்ட முதல் தாக்குதற் படைத்தளபதி லெப். கேணல் சாள்ஸ்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் இன்று பல தளபதிகளையும் போராளிகளையும், பொது மக்களையும் இழந்திருக்கிறோம். யுத்த காலங்களில் தான் நாம் அத்தகைய விலையைக் கொடுத்தோம். ஆனால் இன்றைய சமாதான காலத்திலும் நாம் கடலில் 35இற்கும் மேலான எமது கடற்புலிவீரர்களை இழந்திருக்கிறோம்.

அன்று நாம் கடலில் நடைபெற்ற சண்டையில் சாள்ஸ் அவர்களின் படகில் பொருத்தப்பட்டிருந்த 50 கலிபர் துப்பாக்கி இயங்க மறுத்ததால் எங்கள் தளபதி சாள்ஸை நாம் இழக்கவேண்டி நேர்ந்தது. அன்று நாம் இழந்த தளபதி சாள்ஸ் அவர்களின் வழிநடத்தலில் இன்று புதிய புதிய தளபதிகள் பலர் உருவாகியிருக்கிறார்கள்.

இன்றைய சமாதானம் எமது மக்களுக்கு எதையும் தந்துவிடவில்லை எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில்தான் அவர்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருகிறார்கள். கரையோர மக்களின் தொழில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. தொடர்ந்தும் பாரம்பரிய கருவிகளுடன் தான் அவர்கள் தொழில் புரிந்து வருகின்றார்கள். இன்று எமது மக்களின் கடலில் வேறு பகுதி மீனவர்கள் நவீன மீன்பிடி உபகரணங்களுடனும் தொலைத் தொடர்புக் கருவிகளுடனும் வந்து மாதக் கணக்கில் தங்கி நின்று மீன்பிடித்துச் செல்கின்றார்கள். எமது மீனவர்கள் கடலில் இறங்கித் தொழில் செய்தவற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நவீன உபகரணங்களைப் பெற்றுத் தொழில் புரிய



முடியாதவர்களாகவே இருக்கின்றனர். ஏதோ தம்மிடம் இருப்பவற்றை வைத்துக்கொண்டு தமது வாழ்வை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கில் யுத்தம் நிறுத்தப்பட்டு இன்று இரண்டரை வருடங்கள் தாண்டிவிட்டன. இயல்பு வாழ்க்கை உருவாக்கப்பட்டிருப்பதாகவே தான் கூறப்படுகின்றது. உண்மையில் இந்த மக்கள் வறுமையின் பிடியிலிருந்து இன்னும் மீளாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். தென்னிலங்கையில் வாழ்கின்ற மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார வளர்ச்சி மற்றும் அதனுடன் இணைந்த பல வேறு வசதிகள் எதுவும் எமது மக்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்க வேண்டும். அவ்வாறு செயற்படுவதன் மூலம் தான் எமது மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(லோ)

---

## புலமைப்பரிசில் பரீட்சை ஆகஸ்ட்-15 இல்

(அலுவலக செய்தியாளர்)

2004 ஆம் ஆண்டு தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் போட்டிப்பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ளதென பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சோ.கு)

---

# வாக்குறுதியளித்துப் 10 மாதங்களாகியும் சூரியமின்கலம் வழங்கப்படவில்லை

## -பாடசாலை அதிபர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாலைநேரக் கற்பித்தலை நடத்துவதற்காக சூரியமின்கலம் இணைத்துத்தருவதாக கடந்த வருடம் உறுதியளித்திருந்த போதும் இதுவரை அந்தச் சூரியமின் கலத் தொகுதி வழங்கப்படவில்லை என வித்தியாலய அதிபர் வீரகத்தி-இந்திரலிங்கம் தெரிவித்துள்ளார்.

1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியைச் சிறிலங்காப்படையினர் கைப்பற்றிய வேளை தமது சொந்த இடத்தில் இருந்து இடம் பெயர்ந்த இப்பாடசாலை மீண்டும் விடுதலைப்புலிகளினால் இப்பகுதி மீட்கப்பட்ட பின்னர் 2002ஆம் ஆண்டு சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. பல்வேறு வசதிக் குறைவுகளுடன் தற்போது இயங்கி வரும் இந்தப்பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் மாணவர்களுக்கான மாலைநேரக் கல்வியை வழங்குவதற்காக சூரியமின்கலம் இணைத்துத் தருவதாக கிளிநொச்சியில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கிவரும் பொது அமைப்பு ஒன்று உத்தியோக பூர்வ முத்திரையிடப்பட்ட தாளில் 28.02.2003 ஆம் திகதியிட்டு மேற்படி தகவலை அனுப்பியிருந்தது.

இன்று பத்து மாதங்களை எட்டுகின்ற நிலையிலும் அந்த உபகரணம் வழங்கப்படவில்லை.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஒருசில வாரங்களில் மாணவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு பெற்றோல் மாக்ஸ் மூலம் இரண்டு மாதங்கள் வரை மாணவர்களுக்கு இரவு நேரத்தில் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. ஆயினும் சூரிய மினகலம் இன்றி அப்பகுதிப் பாடசாலையில் கற்பிக்கமுடியாத நிலை தோன்றியதால் அது கைவிடப்பட்டது. இந்த சூரியமின் கலத்திற்கான பூரணபாதுகாப்பு தருவதற்கான உத்தரவாதத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகச் சென்று தெரிவித்த போதும் அவர்கள் தருவதாக குறிப்பிட்ட சூரியமின் கலத்தை இதுவரை தராது தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்து வருகின்ற னர். எனவே குறித்த சூரிய மின் கலத்தை விரைவாக வழங்கி எமது மாணவர்களின் கல்வி நிலை மேலோங்க உதவுமாறு மேற்படி பாடசாலை அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (லோ,தீ)

---

# பேருந்து சேவை சீரில்லை பயணிகள் அசௌகரியம்

(முத்துஐயன்கட்டு)

புதுக்குடியிருப்பில் இருந்து முத்துஐயன்கட்டு பகுதிக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் பேருந்து சேவை சீரான முறையில் நடைபெறுவதில்லை எனப் பிரயாணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாள் ஒன்றிற்கு இருதடவை மட்டுமே மேற்கொள்ளப்படும் மேற்படி பேருந்துப் பணிக்குப் பழுதடைந்த சிறிய பேருந்தே பாவனையில் இருப்பதால் இப்பேருந்து அடிக்கடி இயங்குநிலை தடைப்பட்டு வீதிகளில் நின்று விடுகிறது. இந்நிலையில் இப்பேருந்தில் பயணிக்கும் நோயாளர்களும், அரச-தனியார் ஊழியர் உள்ளிட்ட ஏனைய பிரயாணிகளும் குறித்த இடத்திற்கு, குறித்த நேரத்தில் செல்ல முடியாத அவல நிலை அடிக்கடி ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. முத்துஐயன்கட்டு பகுதியில் வேலைகளுக்காகச் செல்லும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் தங்களுக்கான பயண நேரங்களில் பேருந்துப்பணி நேரம் பொருத்தமாக அமையவில்லை எனத் தெரிவித்துள்ளனர். (து)



புதுக்குடியிருப்பு சந்தியில் உள்ள பாலத்தை விலத்தி நீர் பாயும் வாய்க்காலில் வீழ்ந்து விபத்துக்குள்ளான லான்மாஸ்ரர் வாகனத்தையே படத்தில் காண்கிறீர்கள். (படப்பிடிப்பு தவரட்ணம்)

---

# வட்டக்கச்சி கட்சன்வீதி புனரமைக்கப்படுமா ?

வட்டக்கச்சி கட்சன் வீதி தொடக்கம் இரணைமடுக் குளக்கட்டுவரையான பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

மிகச்சிறிய வாகனம் தொடக்கம் கனரக வாகனம் வரை இந்த வீதியால் பயணம் செய்யாமல் உள்வீதியினாலேயே பயணம் செய்து வருகின்றது. மற்றும் அவ்வீதியில் வட்டக்கச்சி மகாவித்தியாலய மைதானத்திற்கு முன்பாக உள்ள நீர்த்துரிசு அரிப்புக்கு உள்ளாகி உள்ளது. எனவே இவ்வீதியையும், நீர்த்துரிசையும் உரியவர்கள் கவனத்தில் எடுக்கும் வண்ணம் மக்கள் கேட்டுள்ளனர். (12)

---

# இந்தியாவிலிருந்து திரும்பிய சிறுவரின்கல்விநிலை மிக மோசம்

## வட்டக்கண்டல் அ.த.க. அதிபர்

(அலுவலக செய்தியாளர்)

போர் காரணமாக மன்னார் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்துவிட்டு தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலையடுத்து மீண்டும் மன்னார் வந்து தமது கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் கல்வி நிலையில் போதிய முன்னேற்றமில்லாதிருக்கிறார்கள் என மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைப் பிரதி அதிபர் திருமதி. பீடி எட்வின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக ஏனைய பகுதிகள் எவ்வித பாதிப்புக்களுக்குள்ளாகியதோ அதேபோலவே மன்னார்ப் பகுதியும் பெரும் பாதிப்புக்களை அடைந்தது. இதன் காரணமாக எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெரும்பாதிப்புக்குள்ளாகியது. யுத்தத்தின் கோரத் தாக்கங்களினால் மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு நீண்ட தூரங்களுக்கப்பால் கடல் கடந்து சென்று இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு இந்தியாவில் தஞ்சம்புகுந்தவர்களில், மாணவர்கள் சீரான கல்வியைப் பெறவில்லை. அவர்கள் இந்தியாவில் இருக்கின்ற பாடசாலைகளில் சரியான படிமுறையான கல்வியை பயில்வதற்கு ஏற்றவசதி வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. அது மட்டுமன்றி அவர்களின் வயதுக்கேற்ப கல்வி வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய தரத்தில் இருக்கவேண்டியநிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், கடந்த மாசி மாதம் முதல் இன்று வரை 25இற்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது பாடசாலையில் புதிதாக இணைந்திருக்கின்றார்கள். அவர்களின் வயதுப்படி அவர்கள் கற்க வேண்டிய தரக் கல்வியை கற்க முடியாத நிலையில்தான் அவர்கள் இருக்கின்றார்கள். அடிப்படை கல்விகூட இவர்களுக்குச் சரியான முறையில் வழங்கப்படவில்லை. இதனால் இந்த மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிப்பது என்ற பிரச்சினை எழுந்துள்ளது. ஏனைய மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கும் இவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கும் பெரும் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. இவர்களை உயர்வடையச் செய்வதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எனினும் அ[illegible]னளிப்பதாகத் தெரி[ய]வில்லை [illegible] அவ[illegible] மேலும் தெ[ரிவி]த்தார். (லோ, தீ)

---

## -34 வருட சேவையின்பின்-

# ஓய்வுபெறும் ஆசிரிய ஆலோசகர்

(அலுவலக செய்தியாளர்)

சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் ம. அன்ரன்யோசப் தனது 34 வருட சேவையின் பின் கடந்த 03.06.2004 இல் ஓய்வுபெற்றார்.

இவர் சித்திர சிற்பக்கலையில் மிகவும் பிரபல்யம் பெற்றவர் என்பதுடன் சித்திர சிற்பக் கலையினை எம் மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லும் வகையில் அன்றைய காலங்களில் கிளிநொச்சி கவின் கலைக்கல்லூரிகளில் சனி,ஞாயிறு தினங்களில் மாலைநேர வகுப்புக்களை நடாத்தி சித்திரசிற்ப பயிற்சியினை வழங்கிப் பல ஓவியர்களை இங்கு உருவாக்கியவராவார்.


(சோ,கு)

---

# வீழ்ச்சிப்போக்கில் மாற்றம்

பங்குச்சந்தை வர்த்தகத்தில் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டிருந்த வீழ்ச்சி திடீரென்று நேற்று முன்தினம் முதல் மாற்றமடைந்து காணப்படுகின்றது என்று பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் கூறியுள்ளனர்.

இதற்குக்காரணம், தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான விடுதலைப் புலிகளின் முக்கிய நிபந்தனைகளுக்கு சனாதிபதி சந்திரிகா ஒப்புக்கொண்டுள்ளார் என்று வெளிவந்த செய்திகளே என செய்திகள் தெரிவிக்கின்றன.



நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் ஹெய்ன் ரென்ற்பிறிட்ஜில் நடந்த மூன்றாவதும் இறுதியுமான டெஸ்டில் பந்து வீசுவதையும்,இங்கிலாந்து துடுப்பாட்டக்காரரான அன்ட்ரூ பிளின்ரொவ் தனது அரைச் சதத்தை நோக்கி ஆடுவதையும், இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் மத்தியு, ஹொக்காட் நியு,சிலாந்தின் துடுப்பாட்டக்காரரான கிறிஸ் மார்டினைப் போட்டியிலிருந்து விலக்கியதைக் கொண்டாடுவதையும் படங்களில் காணலாம்.இதில் கிறிஸ்கெய்ன் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில்

## ஷேன் வோர்ன் கலந்து கொள்வது சந்தேகம்



அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் சிறிலங்கா அணியுடனான டெஸ்ட் தொடரில் கலந்துகொள்வது சந்தேகத்துக்கு இடமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தின் "ஹவுண்டி" அணிக்காக விளையாடி வரும் ஷேன் வோர்ன் கடுமையாகக் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் காயம் காரணமாக அடுத்த மாதம் இடம்பெறும் சிறிலங்காவுடனான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அறிவித்துள்ளது.

இதனால் அவுஸ்திரேலிய தொடரில் சாதனை வீரர் முரளிதரன் விக்கெட் எண்ணிக்கையை முறியடிக்கப்போராடிவரும் ஷேன் வோர்னின் எதிர்பார்க்கை பயனற்றுப்போயுள்ளது. தற்போது இங்கிலாந்தின் பிராந்திய அணியின் ஹமீர்சே அணிக்காக விளையாடிவரும் வோர்ன் போட்டி ஒன்றில் கலந்துகொண்டபோது எக்ஸஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டரன்கௌவ் வீசிய பந்தைத் தடுத்தாட முனைந்த போது இடது கையில் காயத்துக்குள்ளானார்

இதனை அடுத்து மருத்துவ சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட வோர்ன் ஆகக்குறைந்தது ஐந்து வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.வலதுகை சுழற்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன் தற்போது இடது கையில் காயத்துக்குள்ளான போதிலும் இது அவரது பந்துவீச்சுப் பாணியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதினால் சிறிலங்கா அணியுடனான போட்டியில் கலந்துகொள்வதில் சந்தேகம் எழுந்துள்ளது.

## 5000 மீற்றர் மெய்வல்லுநர் போட்டியில் எதியோப்பிய வீராங்கனை உலகசாதனை

மகளிருக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் எதியோப்பிய வீராங்கனை எர்வன் அமோனக்காசி உலக சாதனையை நிலைநாட்டியுள் ளார்.

நோர்வேயில் நடைபெற்ற கோல்டன்லீக் மெய்வல்லுநர் போட்டியிலேயே அவர் இந்தச்சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவர் 5000 மீற்றர் தூரத்தை 14 நிமிடம் 24.68 செக்கன்களில் ஓடி முடித்து உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். ஏழு வருடங்களுக்கு முன்னர் சீன வீராங்கனை பூஜிங் வசமிருந்த 14.28.09 நிமிடங்களில் இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.இதேவேளை செக்குடியரசில் நடைபெற்று வரும் ஐ.ஏ.ஏ. எ∴ப் சூப்பர் கிராண்ட் பிரீக் போட்டியில் பத்தா யிரம் ஓட்டப்பந்தயத்தில் எதியோப்பிய நாட்டு வீரர் கெனெநிசா பிகெலே புதிய உலக சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. அவர் 26 நிமிடங்கள் 20.31 வினாடிகளில் பத்தாயிரம்மீற்றரைக் கடந்தார்.

### ஆஷஸ். கிரிக்கெட் தொடரின்போது 20 ஓவர்கொண்ட ஒருநாள் போட்டி?

இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகள் கலந்துகொள்ளும'ஆஷஸ்' வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது 20 ஓவர் கொண்ட போட்டிகளை நடத்துவது பற்றி இங்கிலாந்து அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை. கள் ஆலோசனைகளை மேறகொண்டு வருகின்றன. இரு அணிகளும் அடுத்த ஆண்டு 'ஆஷஸ்' போட்டிகளை நடத்துவது தொடர்பான போட்டி அட்டவணைகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன.

இதன்போது 20 ஓவர் போட்டிகளுக்கான போட்டி அட்டவணைகளை வேறாகத் தயாரிபபதற்கும் திட்டமிட்டுள்ளனர். இதற்கான இடம் காலம்பற்றி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த பாகிஸ்தான் பூரண ஆதரவு வழங்கும்

2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த பாகிஸ்தான் ஆதரவு தெரிவித்துள்ளது .

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளின் ஒலிம்பிக் சங்க நிர்வாகிகள் சங்கக் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. அப்போது இரு நாடுகளுக்குமிடையிலான விளையாட்டு உறவை வலுப்படுத்துவதற்கான வழிமுறை பற்றி விவாதிக்கப்பட்டது. அதன் ஒரு கட்டமாக இந்தியா மற்றும் பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மானிலங்களுக்கும் இடையே விளையாட்டுப போட்டிகளை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

மேலும் 2014 ஆம் ஆ[illegible]டு ஆசிய விளையாட்டுப் போட்[illegible]ளையும்,2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளையும் இந்தியாவில் நடத்த முழு ஆதரவு அளிப்பதாக பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்க நிர்வாகி முகமது நபி கூறியுள்ளார்.




## 14 வருடங்களின் பின் விம்பிள்டன் ஒற்றையர் ஆட்டத்தில் மீண்டும் பிரவேசிக்கிறார் அமெரிக்காவின் நவரத்தினலோவா



லண்டனில் ஆரம்பமாகவுள்ள விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் மாட்டினா நவரத்தின லோவா மீண்டும் பங்குபெற்றவுள்ளார். 1994 ஆம் ஆண்டில் நவரத்தின லோவா கடைசியாக விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் கலந்து கொண்டிருந்தார்.

அவ் வருடம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை கொன்சிடாவிடம் அவர் தோல்வி அடைந்தார்.எனினும் இரட்டையர் ஆட்டங்களில் தொடர்ந்தும் பங்குபற்றிவந்த நவரத்தினலோவா, கடந்த வருடம் இந்தியாவின் லியாண்டர் பயசுடன் இணைந்து கலப்பு இரட்டையர் பட்டத்தை வென்றெடுத்தார்.

இதன் மூலம் விம்பிள்டனில் 20 பட்டங்களை வென்றெடுத்த பிரிட்டிஷ் வீராங்கனையான வில்லியூனின் சாதனையை அவர் சமப்படுத்தினார். செக்குடியரசை பிறப்பிடமாகக்கொண்ட அமெரிக்க வீராங்கனை நவரத்தின லோவா கடந்த வாரம் நிறைவுபெற்ற பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டியின் போது ஒற்றையர் ஆட்டத்தில் மீள் பிரவேசம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்னணி டென்னிஸ் வீரர் அன்ரூரொடிக் புதிய உலகசாதனை நிலைநாட்டினார்



லண்டனில் நடைபெற்று வரும் 'ஸ்ரெலா ஆட்டோ ஏச்' சம்பியன் கிண்ணப்போட்டிகளின் அரையிறுதிப் போட்டியில் விளையாட உலகின் முதல் நிலை வீரர் அன்ரூரொடிக்கும் லெவிட்டன் கெவிட்டும் தகுதி பெற்றுள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற கால்இறுதிப் போட்டி ஒன்றில் வெற்றியீட்டிய அமெரிக்க வீரர் அன்ரூரொடிக் டென்னிஸ் போட்டியில் புதிய சாதனை ஒன்றை படைத்தார்.

லண்டன் குயின்கிளப் மைதானத்தில் நடைபெற்றுவரும்இந்தப் போட்டியில் அமெரிக்க வீரர் அன்ரூரொடிக் தாய்லாந்து வீரர் பரடோனை6-3,6-3 என்ற நேர் செட்களில் வீழ்த்தினர் இந்தப் போட்டியில் மிகச் சிறப்பாகத் தனது ஆற்றலை வெளிப்படுத்திய ரொடிக் டென்னிஸ் போட்டி ஒன்றில்"அதிவேக முதற்பந்தடியில்" சாதனை ஏற்படுத்தினார்.


இதற்கு முன்னர் மணிக்கு 152 மைல்கள் என்ற தன்னுடைய முந்தைய சாதனையை முறியடித்து 153 மைல்கள் என்ற புதிய சாதனையை ரொடிக் நிலைநாட்டினார். இதேவேளை நேற்று நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் லெயிட்டன் கெவிட்டும் இகோ அன்ரிவுமமோதினர்.இதில் கெவிட் 6-3,7-5 என்ற நேர் செட்டில்வெற்றி பெற்றார்.

## சிறப்புற நடைபெற்ற மாவீரர் சுகு ஞாபகார்த்த கால்பந்துப் போட்டி

மாவீரர் சுகு(ரமேஸ்) ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டப்போட்டி 09.06.2004. பி.ப.3.30 மணிக்கு முள்ளிய வளை வித்தியானந்த கல்லூரி விளையாட்டுத்திடலில் சிறப்பான முறையில் இடம் பெற்றது.

மேற்படி போட்டி நிகழ்வா னது முள்ளியவளைப் பிரதேச ஆசிரியர் அணிக்கும் முள்ளி யவளை வித்தியானந்த கல்லூரி மாணவ அணியினருக்கும் இடையில் நடைபெற்றது. போட்டியினை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் K.P சிவலிங்கம் ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைத்தார். விறுவிறுப் பாக நடைபெற்ற மேற்படி போட்டியில் 01-0 என்ற கோல் கணக்கில் மாணவர் அணி வெற்றியீட்டியது. வெற்றியீட்டிய மாணவர் அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை மாவீரர் சுகு (ரமேஸ்) வின் இளைய சகோதரன் இராஜபுத்திரன் (கர்க்கண்டு) மாணவ அணித்தலைவன் சு.டீலீசனிடம் வழங்கி கௌரவித்தார். (ஆ)

## சிந்தனைக்கு



உழைக்கும் கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-06-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com

## இன்னும் ஒன்றல்ல...!

"பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, மீண்டும் தேர்தலுக்கு முகம் கொடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம்" என்ற வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அவர்களின் கூற்றுக்கள், மீண்டும் ஒரு தேர்தல் குறித்து அரசாங்கம் சிந்திக்கத் தொடங்கிவிட்டது என்பதையே வெளிப்படுத்துவது போன்றுள்ளது.

பாராளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களான பிக்குகள் மீதான தாக்குதலை அடுத்து ஊடகவியலாளரிடம் பேசிய ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பிக்குகள் மீது தாக்குதல் நடத்தவில்லை என மறுத்துள்ளதோடு, கூடவே இவ் எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளார்.

ஐ.ம.சு. முன்னணி ஆட்சிக்கு வந்து நான்கு பாராளுமன்ற அமர்வுகள் நிகழ்ந்துள்ளபோதும், தமது பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாத அரசாங்கம், பெரும்பான்மையைக் கொண்ட எதிர்க்கட்சிகளை நோக்கி இத்தகைய எச்சரிக்கையை விடுத்துள்ளமையானது, இலங்கையில் சனநாயகம் எதிர்நோக்கியுள்ள அவலத்தின் வெளிப்பாடு என்றே கொள்ளலாம்.

ஆனால், ஆளும் கட்சியின் இவ் எச்சரிக்கையானது அக்கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சி தோல்வியில் முடிவடைந்துவிட்டதன் விளைவு என்றே கொள்ள வைக்கின்றது. இந்நிலையில் ஆட்சியில் இருப்பது ஆபத்தான விளைவுகளை அதாவது, ஆளும் கூட்டணி அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, சனாதிபதி பதவிக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்ற சந்தேகமே இவ்வாறு புதிய தேர்தல் குறித்து ஆட்சியாளர்கள் சிந்திக்கக் காரணமென ஊகிக்கத்தக்கதாகவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறாதுவிட்டாலும்/ அரசாங்கத்தை அமைத்ததும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவது / திரட்டுவது என்பது கடினமானதொரு விடயமாக இருக்கும் என எதிர்பார்க்கவில்லை. ஆளும் கட்சியாகவே என்றும் இருந்து பழகிவிட்ட சில சில கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவது சிக்கலானதாக இருக்கமாட்டாது என்றே சனாதிபதி சந்திரிகா நம்பியிருக்கக் கூடும்.

அதிலும் குறிப்பாக முதலில், ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவு கிடைக்கப் பெறும் என்பதே ஐ.ம.சு.முன்னணி எதிர்பார்ப்பாய் இருந்தது. ஏனெனில், ஐ.தே. முன்னணியின் விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை எதிர்க்கும் ஜாதிக ஹெல உறுமய ஐ.தே. முன்னணியைப் பொது எதிரிகளாகக் கொண்டு தம்மை ஆதரிக்கும் என்றே ஐ.ம.சு. முன்னணி நம்பியது.

ஆனால், ஆரம்பம் முதலே ஜாதிக ஹெல உறுமயவுடனான உறவு சீரானதாக அமையவில்லை. அதிலும் குறிப்பாக, சபாநாயகர் தெரிவுடன் முரண்பாடு தீவிரமாகியது. இதன் விளைவாக ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமயவிற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள், ஜாதிக ஹெல உறுமய எந்த வேளையிலும் ஐ.ம.சு.முன்னணியை ஆதரிக்க முடியாததொரு நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அடுத்ததாக முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதும் சிரமம் மிக்கதொன்றாக இருக்கும் என சனாதிபதி சந்திரிகா கருதியிருக்கவில்லை. சில அமைச்சுப் பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் இவர்களை "வாங்கி விடலாம்" என்பதே அவரின் கணிப்பீடாக இருந்தது. இது முற்றிலும் தவறான மதிப்பீடு என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில், கடந்த கால நிகழ்வுகளும் இதனையே வெளிப்படுத்துபவையாக இருந்தன.

ஆனால், இம்முறை பேரம் பேசுதலில் அமைச்சுப் பதவிகளுக்கு அப்பால் இச்சிறு கட்சிகள்சிலநிபந்தனைகளை முன்வைத்தமையும், – சனாதிபதி ஆட்சி முறை நீடிப்பு, விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் தொடர்ந்து நீடித்தல் போன்றவை– மறுபுறத்தில் ஐ.ம.சு. முன்னணியின் முக்கிய பங்கு– தாரியாக ஜே.வி.பி. அமைச்சுக்களை 35இற்கு மேல் அதிகரிப்பதற்கு ஏற்படுத்திய முட்டுக்கட்டையும் இக்கட்சிகளின்" ஒத்துழைப்பை ஆளும் கட்சி பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஒழித்தன. அதேவேளை, இச்சிறு கட்சிகளை உடைப்பதற்கு ஆளும் கட்சி மேற்கொண்ட முயற்சிகளும் பூரண வெற்றிபெறவில்லை.

இந்நிலையில் அதாவது, அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வது சாத்தியமற்றதொன்று என்பது உணரப்பட்ட நிலையில், ஆளும் கட்சி மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளது போல் தெரிகின்றது. ஆனால், இது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதாக இல்லை. ஏனெனில், சனாதிபதி சந்திரிகா தமது நலனுக்காக பெரும்பான்மை அரசாங்கத்தைக் கலைத்து தேர்தல் நடத்தியவர். சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தவர், ஆகையினால் அதனைக் கலைத்து தேர்தல் ஒன்றிற்குச் செல்லமாட்டார் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இதனால், சனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு இறுதியில் முடிவதற்குள் இன்னும் ஒன்றல்ல;அதற்கு மேலும் பொதுத் தேர்தல்களை நடாத்த சனாதிபதி சந்திரிகா தீர்மானித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## ஐக்கிய நாடுகள் சமாதானப் படைக்கு பயிற்சி வழங்குவதற்கான நிலையம் திறப்பு

ஐக்கிய நாடுகளின் சமாதான நடவடிக்கை தொடர்பாக இராணுவத்தினருக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு அண்மையில் நிர்மானிக்கப்பட்ட இலங்கை சமாதான ஆதரவு நடவடிக்கைப் பயிற்சி நிலையம்நேற்று இரத்தினபுரி மாவட்டம் கெகுலுகங்கைப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளைஆசிய நாடு களின் இராணுவத்திற்கு ஐக்கிய நாடுகள், அமைப்பினரால் நடத் தப்படும் பல்தேசிய இராணுவப் பிரிவுகளின் பயிற்சிப்பட்டறையின் மூன்றாவது அலகும் நேற்று ஆரம் பமானது. ஐக்கிய நாடுகள் அமைப் பினரால் நடத்தப்படும் இப் பாடநெறிக்கு இலங்கையும், அமெரிக்காவும் அனுசரனை வழங்குகின்றன. 27ஆம் திகதி வரைநடைபெறும் இப்பாடநெறிக்கு "சமாதானப் பாதையில்" எனப் பெயர் இடப்பட்டுள்ளது. இதில் இலங்கை,நேபாளம்,பங்களாதேஷ், அமெரிக்கா ஆகிய நாடுகளைப் பிரதி நிதித்துவப்படுத்தி 230 படையினர் பங்கு பற்று கின்றனர். ஐக்கிய நாடுகளின் சமாதானப் பணிகளின் பொருட்டு தனது பங்களிப்பை வழங்கு வதற்கு இலங்கைக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை குறித்துத் தாம் மகிழ்ச்சியடைவதாக இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் நாட்டிற்குள் ஏற்பட்டிருந்த ஒவ்வொரு பிரச்சினையையும் சர்வதேச தலையீட்டின் ஊடாக தீர்க்க முடியாதென நாம் நம்புகிறோம். இதே போன்று மற்றுமொரு விடயத்தையும் நாம் மறக்கக் கூடாது. சாத்தியமான இராணுவ நடவடிக்கையூடாக சமூகபொருளாதார மற்றும் அரசியல் காரணங்களுக்கு தீர்வுகளைஎட்டமுடியாது இந்த விடயத் திற்கு உரித்தான காரணம் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும் இதனால் நாம் யதார்த்தத்தை புரிந்து கொண்டு சமாதான நடவடிக்கைகளில் எவ்வாறு தலையீடு செய்வது என்பது குறித்து தெரிவு செய்து கொள்ள வேண்டும். எமது இராணுவத்தினருக்கு தெளிவான இலக்கும் குறிப்பிட்ட வழிமுறைகளும் இருக்க வேண்டும். இதன் மூலமே பிரச்சினைகளை இலகுவாக அனுகமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் இலங்கை இராணுவ வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும் என இந்நிகழ்வில் கலந்து கொண்ட இராணுவத் தளபதி தெரிவித் துள்ளார். அவர் மேலும் கூறு கையில் சமாதானப் படைகளுக்கு ஆட்களை அனுப்புவதற்கு முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளன. எதிர் காலத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட படைகளை அனுப்ப எதிர்பார்ப்பதாகவும் அதேபோன்று தொடர்ந்தும் பயிற்சிகள் வழங்க விருப் பதாகவும் தெரிவித்துள்ளார். இச் சந்தர்ப்பத்தில் தாம் சர்வதேச சமூகத்தினுள் நுழைந் திருப்பதாகவும் தெரிவித்த அவர் சர்வதேச சமாதானப் படைகளில் இணைந்துகொள்ள இலங்கை தீர்மானித்துள்ளது. இதுஅரசாங்கத்தின் தீர்மானம் உலகம் முழுவதும் பிரச்சினைகள் நிலவுகின்ற பகுதிகளில் அமை தியை ஏற்படுத்த இலங்கை பங்க ளிக்க முடியும் எனத்தான் எண்ணுவதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் 19ஆயிரத்திற்கு அதிகமான சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்

இலங்கையில் மட்டும் 19000இற்கும் அதிகமான சிறுவர்கள் வேலைக்கு அமர்த் தப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.குறைந்தளவு வருமானம் உள்ளவறுமைக் கோட்டிற்குக் கீழான வாழ்கைத் தரம் கொண்ட குடும்பங்களே தமது குழந்தைகளை வேலைக்குஅனுப்பி வருவதாகவும் இந்த குழந்தைகளுக்கான அடிப் படைக் கல்வி அறிவு கூடவழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

உலகில் 10 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைத் தொழிலாளார்கள் குறைந்தளவு வேதனத்துடன் பணிகளில் அமர்த் தப்பட்டிருப்பதாக தெரிவிக் கப்படுகின்றது.அதிகளவான பெண் குழந்தைகளே இவ்வாறு பணி களில்அமர்த் தப்பட்டிருப்பதாகவும் இவர்கள் நீண்டநேரம் வேலை செய்யுமாறு நிர்பந்திக் கப்படுவதோடு இதற்காக குறைந்தளவு ஊதியமே இவர் களுக்கு வழங்கப்படுவதாகவும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.2மில்லியன்குழந் தைத் தொழிலாளர்கள் 15 வயதிற்குக் குறைந்தவர்கள் என்றும் ஏனையவர்கள் 10 வயதிற்கும் குறைவானவர்கள் என்றும் புள்ளி விபரத்தகவல்கள் தெரிவித் துள்ளன.தென் ஆபிரிக்காவில் ஆகக்கூடுதலாக 7 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் பணிகளில் அமர்த்தப் பட்டுள்ளனர். உடல் உள ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் இந்த குழந்தைகள் துன் புறுத் தப் பட்டுவருவதும் கண் டறியப் பட்டுள்ளது. (32)

## மீண்டும் ஒரு தேர்தலை நடத்துமாறு சனாதிபதியிடம் ஜே.வி.பி. வலியுறுத்தும்

### ஜே.வி.பி. பேச்சாளர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டும் ஒரு தேர்தலை நடத்த சனாதிபதிக்கு தாம் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளதாக ஜே.வி.பி. கூறுகிறது. செய்தியாளர் மத்தியில் ஜே.வி.பி பேச்சாளர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தினை நிரூபிக்கும் வகையில், மீண்டுமொரு பொதுத் தேர்தலை நடத துவதே சரியானது நாடாளுமன்றின் நடவடிக்கைகளை எதிர்க்கட்சியினர் தீர்மானிப்பதைப் பார்த்துக்கொண்டு எத்தனை காலத்துக்குப் பொறுமையாக இருக்க முடியும் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

பெரும்பான்மைப் பலத்தினை நிரூபிக்கும் வகையில் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதாயின் தமது கட்சி அதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறினார். இதேவேளை தாம் மீண்டுமொரு தேர்தலை நடாத்துவதற்கான அழுத்தங்களை சனாதிபதிக்கு கொடுக்க ஆரம்பித்துள்ளதாகவும், செய்தியாளர் மத்தியில் அவர் குறிப்பிட்டார்

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் கலந்து கொண்டிருந்ததாகவும், விமல் வீரவன்சவின் அதே கருத்துக்களையே அவரும் தெரிவித்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. (32)


## ஆளும்கட்சி அரசியல்வாதி விபச்சார விடுதியில் கைது

கொழும்பில் விபச்சார விடுதிச் சுற்றிவளைப்பின்போது ஆளும் கட்சியின் அரசியல்வாதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பில் இலங்கை மற்றும் ஐரோப்பியப் பெண்களையும், இலங்கை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள வியாபாரக் கட்டிடத் தொகுதியொன்றின் 8 ஆவது தளத்தில்விபச்சார நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக கிடைத்த தகவலையடுத்து, குறிப்பிட்ட பகுதியை சிறிலங்கா காவல்துறையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போதே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, இந்த சட்டவிரோத நடவடிக்களுக்குப் பொறுப்பானவர் எனச் சந்தேகிக்கபபடும் பெண் ஒருவர், மூன்று ஆண்களுடன் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும், இம்மூவரில் ஒருவர் ஆளும் கட்சி அரசியல்வாதியெனவும், சிறிலங்கா காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர். (32)

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

முருகைக்கற்பாறைகள் 93 நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு தரம் இழந்துள்ளன. உலகில் மீதந்திருக்கும் பவளப்பாறைகளில் 60 வீதமானவை வரும் 30 ஆண்டுகளுக்குள் பாரிய அழிவைச் சந்திககும் அபாயத்தில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்கா விமானநிலைய பாதுகாப்புக்கு விமானப்படையினரை அழைகக முடிவு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சிறிலங்காவிமானப்படை மீண்டும் அழைக்கப்படவுள்ளனர்.

கட்டுநாயக்க விமானநிலையத்தின்பாதுகாப்பு உட்படப்பல்வேறு விடயங்களில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. என விமானசேவை நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சாலித்த விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் கூறுகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு ஊழியர் பற்றாக்குறை நவீன தொழில்நுட்ப பயிற்சி மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக நிலவுகின்ற குறைபாடுகள் காரணமாக அதன் பாதுகாப்பு போன்றவற்றிற்கு விமானப்படையினரை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பும் இதற்கான மற்றுமொருகாரணமாகும். இதனால் விமான நிலைய பாதுகாப்பு பிரிவினருடன் ஒன்றிணைந்து வாகனப்பரிசோதனைகளிலும் பயணிகளிடம் சோதனையிடும் நடவடிக்கைகளிலும் விமானப்படையினர் ஈடுபடுவார்கள் என சாலித்த விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# பலாலி விமானத்தளத்தைத் திருத்த இந்திய அரசு நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)

யாழ். பலாலி விமானத்தளத்தை திருத்திச்சீரமைத்துக் கொடுக்க இந்தியா மீண்டும் உறுதியளித்துள்ள போதும் அதற்கு நிபந்தனைகளையும் விதித்துள்ளதாக தெரிய வருகிறது.

400கோடி இந்திய ரூபா செலவில் இதனைப்பூர்த்தி செய்ய முன்வந்துள்ள இந்திய அரசாங்கம், சிறிலாங்கா விமானப் படையைத் தவிர வேறு எந்த நாட்டின் அரசோ, விமான நிறுவனமோ இந்த விமானத்தளத்தை உபயோகிக்கக் கூடாதென நிபந்தனை விதித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த காலத்திலேயே இந்த யோசனை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இந்தியாவின் குறிப்பிட்ட இந்த நிபந்தனை காரணமாக அது முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் புதுடில்லிக்குப் போயிருந்த சமயம் மீண்டும் இந்த யோசனை பரிசீலனைக்கு வந்ததாக அறியப்படுகின்றது.

இவ்விமான நிலையத்தின் மீதான இலங்கையின் இறைமையை இந்தியா மறுக்காது போனாலும் ஏதோ ஒருவகையில் அதன் மீது தனக்கு கட்டுப்பாடு இருக்க வேண்டும் எனக் கருதுவதாகத் தெரிகின்றது. (32)

# புலிகளுக் கெதிரான தடையை நீக்கத் தயாராக இல்லை

## இந்திய உள்துறை அமைச்சர்

(டில்லி)

விடுதலைப்புலிகளுக் கெதிரான தடையை நீக்கத் தாம் தயாரில்லை என்று இந்திய உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் தெரிவித்துள்ளார்

உள்துறை அமைச்சின் கடமையினைப் பொறுப் பேற்றதன் பின்னர் நடத்தப்பட்ட முதலாவது பத்திகையாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஒருவர் கைது

பிரதி அமைச்சர் சூரியாராச்சியின் வாகன அணி மீது தாக்குதல் மேற்கொண்டு இருவரை கொலை செய்த சமபவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் சிறிலங்கா காவல்துறையால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குபயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்தாகவும் சந்தேக நபர் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா காவல்துறை வட்டாரங்கள தெரிவித்தன.

தலைமறைவாகி இருக்கும் மற்றைய நபரை தாம் தேடிவருவதாகவும் கூறியுள்ள காவல்துறையினர் இந்த இரட்டைக்கொலைகள் அரசியல் நோக்கம் கொண்டவை அல்ல என்றும் இது பாதாள உலக மோதலின் ஒரு பகுதியாக இருக்கும் என தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளனர் (32)

# கிழக்கு பல்கலை மாணவர்களுக்கு நாளை விரிவுரை ஆரம்பம்

கிழக்குப் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த அனைத்துப்பீட மாணவர்களுக்குமான 2003,2004ஆம் கல்வி ஆண்டின் விரிவுரைகள் நாளை ஆரம்பமாகவுள்ளது.

விடுதியில் தங்கும் மாணவர்கள் மாலை 6.00 மணிக்கு முன்னதாக மட்டக்களப்பு வந்தாறு மூலை விடுதிக்கு சமூகமளிக்க வேண்டுமென தெரிவிக்கப்படடுள்ளது.

# தகவல்த்துறை அமைச்சராக மங்கள சமரவீர பதவியேற்பு

(கொழும்பு)

தகவல்அமைச்சராக மங்கள சமரவீர பதியேற்றுள்ளார் சனாதிபதியின் முன்னிலையில் இந்தப் பதவிப்பிரமாணம் நேற்று இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே தகவல் துறை அமைச்சராகவும், அமைச்சரவைப் பேச்சாளராகவும் பதவி வகித்த றெஜினோல்ட் கூரே மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதன் காரணமாக அந்தப் பதவியில் இருந்து விலகியிருந்தார்.இதனை அடுத்து அரசாங்கப் பேச்சாளராக பதவியேற்ற மங்கள சமரவீர நேற்று தகவல் துறை அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார். (32)

# அரசிலிருந்து விலகும் நோக்கம் ஜே.வி.பி.க்கு கிடையாதாம்

தாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது. இடைக்காலத் தன்னாட்சி தொடர்பில் சனாதிபதி பேச்சுவார்த்தைகள் நடத்தினால் மக்கள் விடுதலை முன்னணி விலகப்போவதாக வெளியான செய்தித் தொடர்பிலேயே இந்த மறுப்பை மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஐக்கியதேசியக் கட்சியின் குறுகிய நோக்கம் கொண்ட பொய்ப்பிரச்சாரங்களால் ஏமாந்து விடவேண்டாமென்றும் ஜே.வி.பி நாட்டுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தனது வேலைத் திட்டத்தைப் படிப்படியாகச் செயற்படுத்தி வரும் வேளையில் அதன் உண்மை நிலையினை மறைத்து மக்கள் கவனத்தைத் திசைதிருப்புவது ஐக்கிய தேசியக் கட்சியின் குறுகிய நோக்கமாகும் என்று ஜே.வி.பி. மேலும் தெரிவித்துள்ளது.

# மல்வத்தை பீடாதிபதியின் இறுதிக்கிரியைகள் இன்று

கண்டி மல்வத்தை பௌத்த பீடத்தின் மறைந்த மகாநாயக்க தேரரின் பூதவுடல் அரச மரியாதையுடன் இன்று மாலை 4 மணியளவில் கண்டி பொலிஸ் மைதானத்தில் மரியாதை வேட்டுக்களுடன் தகனம் செய்யப்படும்.

இறுதிக் கிரியைகளின்போது சனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்தவுள்ளனர். இந் நிகழ்வில் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், பௌத்த பிக்குகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோரும் கலந்துகொள்வார்களென தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை கண்டி நகரெங்கும் மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. பூதவுடல் நாளை மாலை 4 மணியளவில் மரியாதை வேட்டுக்களுடன் தகனம் செய்யப்படும். இதன்போது, ஹெலிகொப்டரிலிருந்து மலரஞ்சலி செலுத்தப் படவுள்ளது. தேரரின் இறுதிக் கிரியையை முன்னிட்டு இன்று தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படுவதுடன், பட மாளிகைகள், மது விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

### சமாதான...

என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை எவ்வாறு ஆரம்பிப்பது என்பதை இருதரப்புக்கும் இணக்கம் ஏற்படாத நிலையில் அரசாங்கம் அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தைகளைக் கொள்கை அடிப்படையிலும், விரிவான முறையில் முன்னெடுப்பதில் கவனம் செலுத்தும் நீண்டகாலமாக நீடித்து வரும் முக்கிய பிரச்சினையான இப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியலத் தீர்வை எவ்வாறு எட்டுவது என்பதில் ஆக்கபூர்வமான இணக்கப்பாட்டை ஏற்படுத்த நாம் தீவிரகவனம் செலுத்தி வருகின்றோம். அதேவேளை வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய அவசர அபிவிருத்திகளை குறுகிய காலத்திற்குள் செய்துமுடிக்க வேண்டிய அவசியத்தையும், பல வருடங்களாக எம்மோடு உள்ள அரசியல் கட்சிகளோடு இந்த முரண்பாட்டிற்கு சரியான தீர்வு எட்டு என்பது பற்றி கலந்துரையாடி வருகின்றோம் என்றார்.

### படைச்சிப்பாய்...

செல்ல படையினர் அனுமதிக்கவில்லை. அதனால் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான படகுகள் தொழிலுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

எனினும் பின்னர் படை அதிகாரிகளுக்கும் மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே இடம் பெற்ற பேச்சுக்களை அடுத்து நண்பகலுடன் அத்தடையை படையினர் விலக்கிக்கொண்டனர்.(27).

### சனாதிபதி...

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்றை எதிர்கட்சிகள் கொண்டுவர முயற்சிக்குமானால் சபாநாயகர் குற்றவியல் பிரேரனையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவும் வாக்களிப்பிற்கும் அனுமதிக்கக்கூடும்.

### ஒஸ்லோ...

நான்கு மாதங்களுக்குள் இறுதித் தீர்வு குறித்து பேசப்படும் என்றும் உத்தேச இடைக்கால நிர்வாகசபை இறுதித் தீர்வின் ஒரு படிநிலையாகக்கொள்ளப்படும் என்றும் சனாதிபதி மக்கள் விடுதலை முன்னணிக்கு உறுதி அளித்துள்ளதாகவும் இதனை அடுத்து மக்கள் விடுதலை முன்னணி தமது நிலைப்பாட்டை தளர்த்தியுள்ளதாகவும்கூறப்படுகின்றது. (32)

இத்தகையதொரு நிலை குறித்தே ஆளும் கட்சித்தரப்பு தற்பொழுது அக்கறை கொண்டுள்ளது. இதேவேளை அத்தகையதொரு சூழ்நிலை உருவாகுமானால் அதற்கு முன்னரே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்துவதற்காக வாய்ப்புகள் அதிகமுண்டு என அரசியல் வட்டத்தில் பேசப்படுகின்றது.

### பேரினவாத...

விடுதலையின் மீதும் பற்றுக் கொண்ட கல்விமான்களையும், உண்மை விரும்பிகளையும் கொன்றொழித்து வருகின்றது. இதன் மூலம் பயங்கரவாத அட்டூளியத்தைப் பரம ரகசியமாகச் செய்ய நினைக்கின்றது. யுத்தநிறுத்தம் என்றெண்ணி இயல்பு வாழ்க்கையில் ஈடுபட நினைக்கும் எமது மக்களை நாளுக்கு நாள் துன்புறுத்தி வருகின்றது.

சொந்த இடங்களைக் கூடச் சென்று பார்க்க முடியாதவாறு வாழ்விடங்களைத் தமது இருப்பிடமாக்கிச் சொத்துக்களையும், விலைபோக முடியாத விளை நிலங்களையும் உயர்பாதுகாப்பு வலயமென்று ஆக்கிரமித்து நிற்கின்றது. வாழ வழியில்லாமல் வாழ்விடத்திற்கு வசதியில்லாமல் வழிப் போக்கர்களாக்கும் பேரினவாத அரசின் கபடத்தனத்தைக் கண்மூடி இனியும் அனுமதிக்க முடியாது.

மேசைக்கு அழைத்துப் பேச வேண்டியவர்களை விட்டுவிட்டு தேசத்துரோகிகளுக்கு பதவிகளைக் கொடுத்துப் பயங்கர வாதத்தையும், ஆக்கிரமிப்பையும் செய்ய நினைக்கும் பேரினவாதத்திற்கு இனியும் பாடம் புகட்டாமல் இருக்க முடியாது. உரிமைகளை இழந்து உயிர் வாழும் இடங்களை இழந்து இனியும் ஏமாற நாம் தயாராக இல்லை

பேச்சு வார்த்தையால் தீர்வுக்கு வர நினைக்கும் புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடரப்பட வேண்டும் எமது நிலம் எம்மிடம் கையளிக்கப்படவேண்டும். எம்மோடு வாழ்ந்தவர்களும் எம்மை வாழ வைத்தவர்களும் எமக்காக உயிர்களை தியாகம்செய்தவர்களை மட்டுமே எம்பிரதேசத்தில் எம்மை வழிப்படுத்த வேண்டும். மாறாக காட்டிக்கொடுத்து காடைத்தனத்தில் ஈடுபட்டு வாழ்விடங்களை காடுகளாக்க துணைபோனவர்களும் தேசத்துரோகிகளும் எம்மிடத்தில் வருவதற்கு அருகதையற்றவர்கள்.

பேச்சுவார்த்தை உடன் ஆரமபிக்கப்படவேண்டும். பேசப்படும் விடையங்கள் தெளிவுபடுத்த வேண்டும். பேரினவாத அரசுகள் மாறிமாறி புரியும் நாடகங்கள் சர்வதேசத்திற்கு வெளிப்பட வேண்டும். சீரற்றுக்கிடக்கும் மக்களின் இயல்பு வாழ்வும் அவர்களின் வாழ்விடங்களுமே முக்கியத்தும் பெறவேண்டும்.புலிகளை மட்டும் பேச்சுக்கு அழைக்கவேண்டும் என்ற ஆணையை மக்கள் பல முறை நிரூபித்து விட்டனர். இனியும் நிரூபிக்கும் உறுதிப்படுத்தும் கோரிக்கைகள் எழுமாறாக இருந்தால் நிரூபங்களையும் கோரிக்கைகளையும் நிஜமான உருவோடு எழுதுவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும் என்ற உண்மையை சர்வதேச சமூகத்திற்கு காட்டவே ஒன்று கூடுவோம்.

இயல்பு நிலையும் வாழ்விடமும் அது பற்றி நிலையான கொள்கையுடன் பேசுவதைத்தவிர இனிவேறு ஏதும் வேண்டாம். பொய்யான அரசியலுக்கும் அதனால் சுகம்தேடி ஆட்சி அமைக்கும் பேரினவாதத்திற்கும் இனி இறுதி எச்சரிக்கையாக அமையட்டும். (33)

# சாவு அறிவித்தல்



## சின்னத்தம்பி தெய்வானை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல.41, ஜெயந்திநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தெய்வானை அவர்கள் 10.06.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார், அமரர் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், இதயரூபன்(மாவீரர் ரகு), இதயரூபி(ஜெயந்திநகர்), கோடீஸ்வரன் (வவுனியா வளாகம்), நந்தரூபி(சுவிஸ்), காந்தரூபன்(கனடா), சாந்தரூபி(கனடா), கேதீஸ்வரன்(மாவீரர் கேசவன்), கேதீஸ்வரி(கொழும்பு), சுபாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுந்தரம்(ஜெயந்திநகர்), சித்திராரூபி(வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), பிரபாகரன்(சுவிஸ்), பிரியா(வட்டக்கச்சி), சிவகுமாரன்(கனடா), கபிலன்(கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் பூதவுடல் ஆனந்தநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார்,உறவினர், நண்பகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பாலசுந்தரம்** (மருமகன்)

(4607)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.